விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 273 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 01 செவ்வாய்க்கிழமை (17.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவே தேர்தலில் போட்டி

## யாழில் பொது வேட்பாளர் அரியநேத்திரன்




*(யாழ்ப்பாணம்)* 75 வருட காலத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## குழப்பம் ஏற்பட்டால் சூடு நடத்த உத்தரவு

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையங்களில் குழப்பம் ஏற்பட்டால் துப்பாக்கிச் சூட்டை நடத்து மாறு கடமையில் உள்ள படையினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக ▷16

## கிளிநொச்சியில் தேர்தல் அலுவலகம் மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முரசுமோட்டைப்பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் மீது கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்சம்பவத்துடன்தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கிளிநொச்சி ▷15

## கிளிநொச்சியில் அரியநேத்திரனுக்கு ஆதரவாகத் திரண்ட பொதுமக்கள்



▷15

## சஜித்துக்கு வாக்களியுங்கள்
### தமிழரசுக் கட்சி அறிக்கை

(கிளிநொச்சி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் வகையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட சிரேஷ்ட தலைவர்கள் கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி ▷15



## தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தை ஏற்கேன்
### சிறீதரன் எம்.பி


(கிளிநொச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உயர்மட்டக் குழு தீர்மானத்தை நிராகரிக்கின்றேன் என ▷16

## காலையில் அரியநேத்திரன் மாலையில் சஜித் பிரேமதாஸ
### மாவையின் அரசியல்

(வவுனியா)

காலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு ஆதரவு தெரிவித்த மாவை சேனாதிராசா, மாலையில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்தது ▷15

வெல்க தமிழ்
சங்கு எங்கள் சின்னம்
எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
கட்சிகளைக் கடந்து
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!

எங்களிடம் இருக்கும் ஜனநாயக ஆயுதம் வாக்குகள்தான் இம்முறையாவது இலக்குத் தவறாது பிரயோகிப்போம்.
தமிழ்ப் பொது வேட்பாளர்
பா.அரியநேத்திரன்
- தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு -
(C-026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இனவாத அரசியலை பெரமுன எப்போதும் முன்னெடுக்கின்றது - அநுர

(கொழும்பு)

இனவாத அரசியலை பெரமுன எப்போதும் முன்னெடுக்கிறது என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாவனெல்லையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எப்போதும் இனவாத அரசியலையே முன்னெடுக்கின்றது.

2015ஆம் ஆண்டு ராஜபக்ஷக்கள் தோல்வியடைந்தனர்.

அவர்கள் பொது மக்களின் கோடிக்கணக்கான சொத்துக்களைக் கொள்ளையடித்திருந்தனர்.

மக்கள் அதற்கு எதிராக வாக்களித்ததை அடுத்து அவர்கள் தோல்வியைச் சந்தித்தனர்.

2016ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பிரசாரங்களையடுத்து, தோல்வியடைந்த மகிந்த குழுவினர் மீண்டும் தலைநிமிர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து ஏப்ரல்-21 தாக்குதலின் பின்னர் மகிந்த தரப்பு முழுமையாகத் தலைநிமிர்ந்ததுடன், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது.

அதன் பின்னரும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார்கள், இவ்வாறான சூழலிலேயே நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. அதன்பின்னர் வாக்களித்த மக்கள் அவர்களை விரட்டியடித்தார்கள். எனினும் அந்தக் குழுவினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே தலைமை வகிப்பதாகத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார். (ம-7)

# தேர்தல் தொடர்பில் 1300 முறைப்பாடுகள்

## பெப்ரல் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 1300 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இவற்றில் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 62 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன் 19 தாக்குதல் சம்பவங்களும் அலுவலகங்கள் மீதான 27 தாக்குதல் சம்பவங்களும் உள்ளடங்குவதாக அவர் கூறியுள்ளார். (ம-7)

மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
076 315 6470

(C-1198)

# ஜனாதிபதியான பின் வேதனமின்றி மக்களுக்காக சேவையாற்றுவேன்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித்

தாம் ஜனாதிபதியாகத் தெரிவானதன் பின்னர், வேதனமின்றி மக்களுக்காகச் சேவையாற்றவுள்ளதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவித சந்தேகமுமின்றி, ஐக்கிய மக்கள் கூட்டணி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியைப் பதிவு செய்யும் என அவர் தெரிவித்துள்ளார்.


தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அரசாங்கம் கதிர்காமம் உள்ளிட்ட புனித பூமிகளில் மதுபானசாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குகின்றது.

இது வேதனைக்குரிய விடயமாகும்.

பொதுமக்களின் வரியினூடாக ஜனாதிபதிக்கான வேதனம் பெறுவது தமது எண்ணம் இல்லை.

அவ்வாறானவர்களிடம் இருந்து நாட்டை பொறுப்பேற்றும், இலங்கையைச் சிறந்த தரத்திற்கு முன்னேற்றுவதே தமது இலக்காகும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

துயர் பகிர்கின்றோம்



எமது யா/யூனியன் கல்லூரியின் பௌதீகவியல் பாட சிரேஸ்ட ஆசிரியர் திரு.ந.ஜெயகாந்தன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்
சு.நடராசா

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-1202)

ஆசிரியர் ஊழியர் நலன்புரிக் கழகம்
யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

மரண அறிவித்தல்

மங்களம் மகேஸ்வரி



தோற்றம் 09.03.1936 மறைவு 13.09.2024

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சாத்தனார்கலட்டி அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மங்களம் மகேஸ்வரி 13.09.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாசிலாமணி - தையலாம்பாள் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சொக்கலிங்கம் - குஞ்சம்மாள் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மங்களம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், குமாரசுந்தரம், நாகேஸ்வரி, விஜயசுந்தரம், சின்னராசா, சோதிநாயகி, லோகநாதன் மற்றும் இராஜேஸ்வரி , லோகநாயகி, ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மிருநாளினி ( ஓய்வு நிலை ஆசிரியர், கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்), ரோகிணிதேவி (ஜேர்மனி), ஸ்ரீபாலன், லிங்கபாலன், மணிசேகரன் (ஓய்வுநிலை அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி), காலஞ்சென்ற சந்திரசேகரன், நளாயினி (பிரான்ஸ்), ஈஸ்வரன் (ஜேர்மனி), தயாளன் (பெல்ஜியம்), காலஞ்சென்ற யாழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சச்சிதானந்தசிவம், காலஞ்சென்ற சிவஸ்ரீ, விக்கினேஸ்வரி (ஓய்வுநிலை உப அதிபர், கிளி/ பன்னங்கண்டி இ.த.க), சசிதாரமணி (ஆசிரியர் யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்), அகல்யா ( யா/ கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்), பூபாலன் (பிரான்ஸ்), யசோதா(ஜேர்மனி), ராதிகா(பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், எழிலரசி - ஸ்ரீலிங்கேஸ்வரன் (பிரான்ஸ்), கோகிலன் - சிவனியா, வேனிலன், சௌந்தர்யா - நிர்மலன் (ஜேர்மனி), மிருதுளா - நிரோஜன் (ஜேர்மனி), ரிசாந்தினி, பகீஸ்வரி, விக்னேஷ், தீபிகா, தரண்யா, துஷாரா, தூயவன், வேந்துயன், வேந்தினி, டிலக்சன், தர்சிகன், நயனா, சந்துஜன், சதுர்ஷன், மதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஜியா, தியான், பராவிகா, நிலா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 17.09.2024 செவ்வாய்க்கிழமை சாத்தனார் கலட்டி, அளவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கேணிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 711 1730 - ம.மணிசேகரன்(மகன்)
ஓய்வுநிலை அதிபர் - யா/மகாஜனக் கல்லூரி

தகவல்:
குடும்பத்தினர்

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் அமரர்


தாமு வீரசிங்கம் வீரசிங்கம் தெய்வநாயகி

திதி: புரட்டாதி பௌர்ணமி திதி 17.09.2024

அன்பு தந்தீர்கள் நல்ல பரிவு தந்தீர்கள் – எமக்கு
நல்லுயர்வு தந்திடவே அமையம் பல செய்தீர்கள்
தேகம் மறைந்தே போனாலும் – ஆன்மா
எம்மோடு வாழ்வதை உணர்கிறோம்
ஆண்டுகள் கடந்தே போனாலும்
ஆயுள் நீண்ட நினைவுகள்
எமை ஏக்கம் கொள்கின்றதே அம்மா! அப்பா!
என்றும் வாழும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சிருக்கும் வரை – வீர நாயகர்களாய்...

"[illegible] கோட்டம்", அல்வாய். (C-1200) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யா/வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

## தீர்த்தோற்சவ சிறப்பிதழ்-17.09.2024



**வங்கக்கடலிலே அவதரித்து வல்லியின் மடியில் தவழ்ந்து வங்கக்கடலில் நீராடி வரும் வல்லிபுரமாயவனே வணங்கு கின்றோம்- உன்அடியை**

எம்பெருமான் ஸ்ரீ சக்கர வல்லிபுர மாயவனது மஹோற்சவம் கடந்த செப்ரெம்பர் 2 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பதினேழு மஹோற்சவங்கள் நடைபெறுகின்றன.

இம் மஹோற்சவங்களில் ஆலய வரலாற்றுத் தொடர்புடைய விழாவாகச் சிறந்து விளங்குவது சமுத்திர தீர்த்தத் திருவிழாவாகும் இன்று மாலை எம்பெருமான் கற்கோவளம் கடற்கரைக்கு தீர்த்தமாடுவதற்கு செல்வார். பக்தர்கள் சூழ்ந்திருக்க மாயவன் சக்கரத்தை, கற்கோவள பக்தர்கள் தோளிலே காவிக்கொண்டு செல்வார்கள். ஆஞ்சநேயத்தீர்த்தம் கற்கோவளக் கடலில் எம்பெருமான் மாயவர், விநாயகர், லக்ஷ்மி ,சமேதராக வந்து தீர்த்தமாடி அடியவர்களின் பாவங்களை போக்குவார். பஞ்சகிருத்தியங்களில் ஒன்றான அருளல் தொழில் தீர்த்தமாடலில் இடம்பெறும் வல்லியின் நாகசாபம் போக்கி குழந்தை வடிவாகி பின் சக்கரமாக மாறிய ஸ்ரீமன் நாராயணர் மச்சவதாரச் சிறப்பு நன்நாள் இந் நாளாகும்.

பரப்பிரம்மானதும் பரமாத்மாவாகவும் இருக்கும் பரம்பொருளை ஏதாவது ஒரு உருவத்தில் வழிபடுவது சனாதன தர்மத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.

இந்த வகையில் ஸ்ரீ வல்லிபுரத்தின் சக்கரத் தாழ்வாரின் ஆலயம் சிறப்புப் பெறுகின்றது. வல்லிபுரத்தில் பகவான் மகாவிஷ்ணு சுதர்சன ரூபத்தில் அமைந்துள்ளார். காத்தற் கடவுளான பகவான் வல்லிபுரத்தின் சுதர்சன வடிவத்தில் அமைந்தாலும் மச்சமாகத் தோன்றி பின் சுதர்சனமாக மாறியதாக கர்ண பரம்பரை கதையொன்று உண்டு.

கலியுகத்தில் ஜீவராசியின் குறைகளைப் போக்கி அவர்களை நிறைவுடன் வாழவைத்ததற்கான லீலா அவதாரங்கள் பல இருந்தாலும் வல்லிபுரத்தில் சக்கர வடிவிலான மச்சாவதாரம் முக்கியமானதாகும். தன்னை நம்பிக்கையுடன் வழிபடுபவர்களுக்கு அருள்பாலிப்பதுடன் தன்னை நம்பி வாழ்பவர்களை வாழ்வாங்கு வாழ வைத்து வருகின்றார். வல்லிபுரத்தில் அமைந்துள்ளதால் இவரை வல்லிபுர ஆழ்வார் என்றும் அழைப்பார். பகவான் மகாவிஷ்ணுவிற்கு பல ஆயிரம் பெயர்கள் இருந்தாலும் இத்தலத்தில் இவரை மாயவன் என்றே அன்புடன் அழைப்பர். இவ் ஆலயம் பாமரர் தொட்டு சான்றோர் வரை சகல மக்களாலும் மிக்க பக்தியோடு போற்றப்படுவது மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

**சாமஸ்ரீ தேசமானிய Lion த.ஜெயரூபன்- சமாதான நீதவான் கணக்காய்வாளரும் வருமான வரி ஆலோசகரும் மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு மற்றும் அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் உறுப்பினர், சமூக சேவையாளர்- கற்கோவளம்.**



**பிரதம குருவின் நல்லருள் ஆசிகள்**

நிகழும் மங்களகரமான குரோதி வருடம் ஆவணி மாதம் 17ஆம் நாள் திங்கட்கிழமை (02.09.2024) கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடந்து சிறப்பான முறையில் நடை பெற்று வருகின்றது. அந்த வகையில் நேற் றைய தினம் 16.09.2024 திங்கட் கிழமை எமது மும்மலங்களை அழிக்கும் பொருட்டு எம்பெருமானின் இரதோற்சவம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. இன்றைய புரட்டாதி 1ஆம் நாள் (17.09.2024) செவ்வாய்க் கிழமை வரலாற்றுடன் தொடர்புடைய அதிமுக்கியத்துவம் வாய்ந்ததுமான சமுத்திர தீர்த்த உற்சவம் எம்பெருமான் திருவருளால் இந்துமகா சமுத்திரத் திலே மிகவும் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது. மாலை நேரத்தில் சக்கர ரூபமாயவன் அவதரித்த இடத்தில். தினத்தில் கடலாடல் திருவிழா நடைபெறுவது சிறப்பு வாய்ந்ததாகும். எல்லாம் வல்ல வல்லிபுர மாயவன் தாழ்பணிந்து பெருமைமிகு மாயவனின் சமுத்திரத் தீர்த்தத்தில் கலந்து சிறப்பிக்கும் அடியவரக்கும், வரமுடியாமல் மாயவன் புகழ் பாடும் அடியவர்கள் அனைவருக்கும் சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வை தருவான் வல்லிபுரத்தான்.

"சர்வம் விஷ்ணுமயம் ஜகத்"
"லோக- சமஸ்தா சுகினோபவந்து"

**பிரம்மஸ்ரீ. சுதர்சன கணபதீஸ்வரக்குருக்கள்,**
**பிரதமகுரு.**

**ஆடிடுவோம் கடற்தீர்த்தம்**

ஆடிடுவோம் கடல் தீர்த்தம் என்ற ஆவல்
அடங்காத அடியார்கள் விரைந்து வர
தேடியெழுந் தோடுதிரை கரையைக் கொஞ்ச
திகழைந்து தலையரவின் காட்சி தந்து
தடங்கடலா யுலகிலருள் வெள்ளம் பாயத்
தலமாக வெமைக் காக்கும் வண்ணம் பூண்டு
மடமையிலா வல்லிபுரப் பகுதியில் நின்று
பேரருளைத் தந்தருள்வாய் போற்றி போற்றி

**கலாபூஷணம்**
**T. தணிகாசலம்**
**கற்கோவளம்**




**சிறீரங்கம் ரெக்ஸ் ரைல்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி,
NTB வங்கிக்கு அருகில்
கிளை-1 வதிரி வீதி, உடுப்பிட்டி.

**விக்னேஸ்வரா திருமண மண்டபம்**
Room, Hall A/C Facility
Conferene Hall With 200 Seating Capacity
யாழ்.பிரதான வீதி, வல்வை.
தொ.பே: 021 226 1567





அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
சரவணா மகாலட்சுமி தங்கமாடம்
இல.93.பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே: 021 321 4577





தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு
தரன் நகை மாளிகை
ம.ம.வி.வீதி,நெல்லியடி
தொ.பே: 021 321 9254
கிளை
தரன் நகை மாளிகை
பிரதான வீதி,
பருத்தித்துறை.





தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நாட வேண்டிய இடம்
வைஷ்ணவி நகைப்பூங்கா
பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே:- 021 226 4519

நியூ அம்பிகை ஜுவல்லறி
NEW AMBIKAI JEWELLERY





Articles All Guaranteed
And Genuine Quality Jewellery
79, பிரதான வீதி, நெல்லியடி.
79, Main Street, Nelliady.
021 226 3285
077 656 9559





நவீன வடிவமைப்புக்களில்
தரமான 22 கரட் நகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
சிறீ சுசீலா நகை மாளிகை
239, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே:- 021 226 1003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## உலகை 108 நாட்களில் சைக்கிளில் சுற்றி வந்த பெண்



அமெரிக்காவைச் சேர்ந்த லேல் வில்காக்ஸ் என்ற பெண் உலக சாதனை படைத்துள்ளார்.

சைக்கிளில் குறுகிய காலத்தில் உலகைச் சுற்றி வந்த முதல் பெண்மணி என்ற பெருமையை லேல் வில்காக்ஸ் பெற்றுள்ளார்.

இவர் 108 நாட்கள், 12 மணி நேரம், 12 நிமிடங்களில் உலகை வலம் வந்தார். வில்காக்ஸ் இந்த நேரத்தில் 29,169 கிலோமீற்றர் (18,125 மைல்கள்) தூரத்தை கடந்தார். 2018ஆம் ஆண்டில், ஜென்னி கிரஹாம் என்ற ஸ்காட்டிஷ் பெண் 124 நாட்களில் இந்தச் சாதனையை படைத்தார்.

இப்போது 38 வயதான வில்காக்ஸ் சிகாகோவில் இருந்து தனது பயணத்தை தொடங்கினார், மீண்டும் அங்கு தனது பயணத்தை முடித்தார்.

அவர் மே 28 அன்று தனது பயணத்தைத் தொடங்கினார். இவர் 4 கண்டங்களில் 21 நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துள்ளார். தினமும் 14 மணி நேரம் சைக்கிள் ஓட்டி. கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளார். (6)

## பங்களாதேஷிற்கு எதிரான தொடரில்- கில், சிராஜ், பண்ட் ஓய்வு?





பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் மூன்று 20 ஓவர் போட்டிகளில் விளையாடுகிறது.

முதல் டெஸ்ட் வருகிற 19ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் தொடங்குகிறது. 2 ஆவது டெஸ்ட் கான்பூரில் 27ஆம் திகதி தொடக்கம் நடக்கிறது. 20 ஓவர் தொடர் ஒக்டோபர் 6ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடக்கிறது.

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஒக்டோபர் 16 ஆம் திகதி தொடங்குகிறது. பங்களாதேஷ் தொடர் முடிந்த பிறகு 3 நாட்கள் மட்டுமே இருப்பதால் டெஸ்ட் போட்டியைக் கருத்தில் கொண்டு கில்லுக்கு ஓய்வு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டி அடுத்த ஆண்டு நடக்கிறது. இந்திய அணி 10 டெஸ்டில் விளையாட உள்ளது.

இதேபோல அடுத்த ஆண்டு சாம்பியன்ஸ் ட்ராபியும் நடைபெற இருக்கிறது. இந்த இரண்டையும் கருத்திற் கொண்டு இந்திய அணி தற்போது 20 ஓவர் போட்டிகளை விட ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

இந்நிலையில் சுப்மன் கில்லை தவிர்த்து மேலும் சில வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்படுகிறது. முகமது சிராஜ், பும்ரா ஆகியோருக்கும் ஓய்வு கொடுக்கப்படலாம். ரிஷப் பண்ட்டும் இதற்கான பட்டியலில் இருப்பதாக தெரிகிறது. (6)

## இலங்கை –நியூசிலாந்து டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பம்



நியூசிலாந்து அணி இலங்கை அணியில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது. இந்தத் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் இந்தத் டெஸ்ட் தொடருக்கான 16 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. தனஞ்செயா டி சில்வா தலைமையில் இந்த அணி களமிறங்குகிறது.

ஒஷதா பெர்னாண்டோ மீண்டும் இலங்கை அணியில் இடம் பிடித்துள்ளார். நிஷான் மதுஷ்காவுக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

**இலங்கை அணி விவரம்**

தனஞ்செயா டி சில்வா (கப்டன்), திமுத் கருணாரத்னே, பதும் நிசங்கா, குசல் மெண்டிஸ், ஏஞ்சலோ மேத்யூஸ், தினேஷ் சண்டிமால், கமிந்து மெண்டிஸ், சதீர சமரவிக்ரம, ஓஷதா பெர்னாண்டோ, அசித்த பெர்னாண்டோ, விஷ்வ பெர்னாண்டோ, லஹிரு குமாரா, பிரபாத் ஜயசூரியா, ரமேஷ் மெண்டிஸ், ஜெப்ரி வான்டர்சே, மிலன் ரத்நாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (6)

## ஆஸி– இங்கிலாந்து போட்டி மழையால் ரத்து–ரி–20 தொடர் சமன்



இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, மூன்று போட்டிகள் கொண்ட “ரி-20” தொடரில் பங்கேற்றது. முதல் போட்டியில் அவுஸ்திரேலியா, இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் மான்செஸ்டரில் மூன்றாவது, கடைசி “ரி-20” போட்டி நடக்க இருந்தது. ஆனால் கனமழை காரணமாக “டாஸ்” கூட போடாத நிலையில் போட்டியை ரத்து செய்வதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து தொடர் 1-1 என சமன் ஆனதால் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் கோப்பையை பகிர்ந்து கொண்டன.

அடுத்து இவ்விரு அணிகள் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கின்றன. முதல் போட்டி செப். 19ல் நாட்டிங்காமில் நடக்கிறது. மீதமுள்ள போட்டிகள் லீட்ஸ் (செப். 21), செஸ்டர்-லி-ஸ்டிரீட் (செப். 24), லார்ட்ஸ் (செப். 27), பிரிஸ்டோலில் (செப். 29) நடக்கவுள்ளன.

இத் தொடருக்கான இங்கிலாந்து அணியில் இருந்து காயம் காரணமாக “ரெகுலர்” கப்டன் ஜோஸ் பட்லர் விலகினார். புதிய கப்டனாக ஹாரி புரூக் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், இது வரை 15 ஒருநாள் போட்டியில் விளையாடி உள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசான் உயர்திரு. சுப்பிரமணியம் சயந்தன் அவர்களின் மணிவிழாச் சிறப்பிதழ்



## நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

திரு.சு.சயந்தன் அவர்கள் யாழ்.மாவட்டத்தின் தலை சிறந்த ஆசான்களில் ஒருவர் என்பதை நன்கறிவேன். முப்பது வருடங்களுக்கும் மேற்பட்ட அளவையியல் மற்றும் மெய்யியல் பாடங்களுக்கான மாணவர் சேவை மகத்தானது. சிறந்த பண்பாளன். மாணாக்கர்களை வழி நடத்திச் செல்லும் விதமும் சிறப்பானது. இவரது மாணாக்கர் குழாம் ஒன்றிணைந்து தமது குருவுக்கு மணிவிழா எடுப்பது மகிழ்வளிக்கிறது. இவர்களின் முயற்சியும் மலர் வெளியீடும் சிறப்புற இறையாசி வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள்,
(இரண்டாவது குருமஹா சந்நிதானம்)



## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

வடக்கில் புகழ் பூத்த அளவையியல் ஆசிரியராகத் திகழும் உயர் திரு.சுப்பிரமணியம் சயந்தன் அவர்களின் மணிவிழாக் குறித்து நல்லாசி கூறி வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். பல நூறு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு முக்கிய காரணமாக விளங்கியவர். மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பாக மிகவும் அக்கறையோடு அரும் பணியாற்றியவர்.

இவரது கல்விப்புலமையை கண்டு சிறந்த ஆசிரியர் என்ற விருதினை 2012 ஆம் ஆண்டு அரசு வழங்கி கௌரவித்தது. மணிவிழாக் காணும் திரு.சயந்தன் அவர்களும் அவர் தம் பாரியார் சிவசக்தி சயந்தன் அவர்களும் என்றும் வாழ்த்துக்குரியவர்கள். அரச பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்து சமூகத்துக்கு பயனுள்ள காரியங்களை ஆற்றவேண்டுமென தெல்லிப்பழை துர்க்கை அம்பாளை பிரார்த்தனை செய்கிறேன்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்.
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.



## யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்துரை

என் அன்பு மாணவன் சுப்பிரமணியம் சயந்தனைக் கொண்டாடும் அழகிய இந்த மணிவிழாப் பொழுதில் மனது மிகவாய் மகிழ்கின்றது. என் ஆரம்பகால சமூகவியல் வகுப்பறைகளில் முதல் மாணவனாக துலங்கிய சயந்தனின் ஆற்றல்களை அண்மையிலும் சேய்மையிலும் நயந்து பெருமை கொள்வேன். "சிந்தனை அறிவியல்" என இன்று கல்வியியல் கொண்டாடும் அளவையியல் துறை ஆசிரியனாக முத்திரை பதித்தவர் சயந்தன். அளவையியலில் அவர் கொண்ட ஞானம் பெரியது. ஆர்வமான அவரது கற்பித்தல் ஆற்றலும் தேடலும் அவரது மாணவர்களின் மேன்மைகளுடன் இரண்டறக்கலந்துள்ளது. புகழ் பூத்த எங்கள் மகாஜனக்கல்லூரி, அருணோதயாக் கல்லூரி ஆகியவற்றின் கல்வி நிர்வாகப்பணியில் பிரதி/பதில் அதிபராக சயந்தன் ஆளுமை வெளிப்பட்ட வாண்மை தனித்துவமானது என்பேன்.

கல்வியியல் துறையின் உயர் கல்வித் தேட்டங்களுடன் தாம் சார்ந்த அளவையியலின் தர்க்கசிந்தனை வழியான சயந்தனின் வாழ்வு மேன்மை பெற்றது என்றால் மிகையில்லை. "மனதின் செம்மையையும் அறிவியலின் விருத்தியையும் பிறருக்குத் தருகின்ற போது அதன் பெறுமதிகள் உங்களதாகும்" என்பார் மகாகவி தாகூர். தன் கல்வியறிவை சமூகத்துக்கும் சயந்தன் கல்விப் பணி அழகாய்த் தொடர்ந்திடவும் நலமான வாழ்வில் அவரும் குடும்பத்தினரும் நிறைந்திடவும் எல்லையிலா அன்புடன் வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்
முன்னாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



## மணிவிழா காணும் என் அன்பு மாணவன் சயந்தன் வாழ்க.

சயந்தன் ஒரு பண்பாளன். அவரை அவரின் சிறுவயது முதல் அறிந்தவன் நான். சேவை மனப்பாங்கு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றின், சொந்தக்காரனான சயந்தன். ஆசிரியர் தொழிலுக்குப் பெருமை சேர்த்த ஓர் உதாரணராக விளங்குகிறார். ஏறத்தாழ 42 வருடங்களுக்கு முன் என்னிடம் அளவையியல் பயின்ற அன்புத் தம்பி சயந்தன், குருவை விஞ்சிய சீடனாக ஓர் சிறந்த அளவையியல் ஆசிரியராகப் பல தலைசிறந்த மாணவர்களை உருவாக்கிக்கொண்டிருப்பதை அறிந்து மிகமகிழ்ந்து அவரை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் சிலகாலத்திற்கு முன் சந்தித்தபோது வாழ்த்தியுள்ளேன். இவரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

சுப்பிரமணியம் சிறிகாந்தலிங்கம்,
சட்டத்தரணி - இங்கிலாந்து
**Solicitor -(England & Wales )**



## வடமாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

அளவையியல் பேராசானாக நீண்ட கல்விப் பணியாற்றி அகவை அறுபதில் மணிவிழாக் காணும் இவ்வேளையில் மணி விழாவின் ஓரங்கமாக இச் சிறப்பிதழுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சிறந்த ஆசிரியராக, நல்ல வழிகாட்டியாக, பரீட்சகராக, அதிபராக என்றவாறு பல வகிபாகங்களிலும் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அவரது சேவையினை இந்நேரத்தில் நன்றியுடன் நினைவு கூருவதுடன் அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும், அவர் உடல், உளதேகாரோக்கியத்துடன் நீடூழி வாழவும் வாழ்த்துகின்றேன்.

திரு.க.ஜெ.பிறட்லி
மாகாண கல்விப் பணிப்பாளர்,வடக்கு மாகாணம்.



## இணைச் செயலாளர்களின் வாழ்த்துச்செய்தி



எமது பேராசான், கடந்த நாற்பது வருடங்களாக கல்வித்துறையில் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். அன்பும், கருணையும், மனித நேயப் பண்புமிக்கவராகவும் நல்ல ஒரு ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். பல மாணவர்களின் மனங்களில் நிலையான இடத்தைப் பிடித்த பேராசான், ஈழத்து அளவையியல், மெய்யியலின் தந்தை எனக் கூறலாம். பேராசான் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

| | |
|---|---|
| திருமதி சிவரூபி இராதாகிருஷ்ணா | திரு.ச.நந்தன், |
| ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, | ஆசிரியர்,யா/மகாஜனக்கல்லூரி |
| க.பொ.த.உ/த-1996 | க.பொ.த.உ/த - 1996 |



அளவையியல் மெய்யியல் பேராசான்
**உயர்திரு. சுப்பிரமணியம் சயந்தன்**
**(B.A,PGDE, MEd,SLTS- Gr I )**

பிறந்த திகதி: 1964.09.05 - மயிலிட்டி
வாழ்விடம், பன்னாலை, தெல்லிப்பழை
பெற்றோர்: சுப்பிரமணியம் - தங்கரத்தினம் தம்பதிகள்
மனைவி: திருமதி சிவசக்தி சயந்தன்
பிள்ளைகள்: அபிராம், அபிசயனி, அபிசரன்

**கல்வி விபரம்**

1. தரம் 1 முதல் க.பொ.த. சாதாரண தரம் வரை யா/கலைமகள் வித்தியாலயம்- மயிலிட்டி (1970-1980)
2. க.பொ.த. உயர்தரம் (1983) யா/வீமன்காமம் மகாவித்தியாலயம், மாவிட்டபுரம்.(1981-1983)
3. கலைமாணிப் பட்டம் - 1989 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
4. பட்டப்பின் கல்வி டிப்ளோமா - 1997- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
5. கல்வி முதுமாணிப்பட்டம் - 2009 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**சேவை விபரம்**

1. அளவையியல் பாட உதவி ஆசிரியர்
1985 - 1986 யா/ நடேஸ்வரா கல்லூரி, காங்கேசன்துறை
1986 - 1990 யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
2. பட்டதாரிப் பயிலுநர்
1990 - 1991 தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பணிமனை.
3. திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்
1991 - 1993 துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை - முல்லைத்தீவு.
4. அளவையியல் பாட ஆசிரியர்
1993.09.01 முதல் 2014.01.26 வரை யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
- பகுதித்தலைவர் 2005.01.01 முதல் 2007. 01.01. வரை
- பிரதி அதிபர் 2007.01.02 முதல் 2014.01.26 வரை
- பதில் அதிபர் 2011.07.08 முதல் 2011.11.01 வரை
- பதில் அதிபர் 2013.11.22 முதல் 2014.01.26 வரை

5. அளவையியல் பாட ஆசிரியர்
2014.01.27 முதல் 2024.09.04 வரை
யா/அருணோதயக் கல்லூரி அளவெட்டி.
- பிரதி அதிபர் 2014.01.27 முதல் 2024.09.04 வரை
- பதில் அதிபர் 2023.06.03 முதல் 2023.07.04 வரை

**விருதுகள்**
- ஆசிரியர் பிரதீபா பிரபா விருது - 2012 கல்வி அமைச்சு.
- சிறந்த ஆசிரியர் கௌரவிப்பு- வலிகாமம் கல்வி வலயம்- 2012.2013.2024.2015

**தனியார் கல்வி நிலையங்களில் ஆசிரியரின் பணி**

1. புதிய உயர்கலைக் கல்லூரி ஆரியகுளம்.
யாழ்ப்பாணம் (பேராதனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கான மெய்யியல் மற்றும் அளவையியல் விரிவுரையாளர்.

**A/L கலை மற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான அளவையியல் ஆசிரியர்**

2. விக்னா கல்வி நிலையம் - யாழ்ப்பாணம்.
3. நிரு கல்வி நிலையம் - கோண்டாவில்
4. பாரதி கல்வி நிலையம் - சித்தங்கேணி
5. வாணி கல்வி நிலையம் - சுன்னாகம்
6. C.C.A கல்வி நிலையம் - சுன்னாகம்
7. பொருளியல் கல்லூரி -சுன்னாகம்
8. சித்திவிநாயகர் கல்வி நிலையம் - மல்லாகம்
9. தான்சன் கல்வி நிலையம் - தெல்லிப்பழை
10. யுனைட்டட் கல்வி நிலையம் - அம்பனை, தெல்லிப்பழை.
11. காங்கேசன் கல்வி நிலையம்- காங்கேசன்துறை
12. அச்சுவேலி கல்வி நிலையம்
13. V.N. அக்கடமி சண்டிலிப்பாய்

**அளவையியல் மெய்யியல் பேராசான் உயர்திரு சுப்பிரமணியம் சயந்தன் அவர்களின் மணிவிழாவும் "சயந்தன் மாண்பு" வெளியீடும்**

**காலம்: 17.09.2024 செவ்வாய்க்கிழமை**
**நேரம்: காலை 9.30 மணி**
**இடம்: பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் திருமண மண்டபம்**
**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

**மணிவிழாக்குழு**
**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் [illegible] மாணவர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்.ஆயரின் ஆசிச்செய்தி

கடந்த 30 வருடங்களிற்கு மேலாக அளவையியல், மெய்யியல் பாடங்களைத் திறம்படக் கற்பித்து பல பட்டதாரிகளை உருவாக்கிய ஆசிரியர் திரு.சுப்பிரமணியம் சயந்தன் அவர்களின் மணிவிழாச் சிறப்பிதழுக்கு ஆசிச்செய்தி வழங்கி, இறையாசி வேண்டி நிற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவர் தனது வாழ்வை முற்றுமுழுவதுமாக மாணவர்களை கல்வியிலே முன்னேற்றுவதிலேயே செலவழித்திருக்கின்றார்.

ஆசிரியராக தொடங்கிய இவருடைய கல்விப்பணி விரிவடைந்து பிரதி அதிபராக, பதில் அதிபர், பேராதனை மற்றும் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு அளவையியல், மெய்யியல் விரிவுரையாளர் எனப் பல்வேறு நிலைகளில் இவரின் பணிகள் மாணவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இவரது அழகிய வாழ்வு பாராட்டுதற்குரியது. இவருடைய அறிவும், அனுபவமும் தொடர்ந்தும் எம் கல்விச் சமூகத்திற்குக் கிடைக்கவும் இவர் என்றும் மகிழ்வாகவும், வளமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ ஆசித்து இறையாசிகளை வழங்கி நிற்கின்றேன். இறைவன் என்றும் இவரை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,
பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்,
யாழ் ஆயர்.



## கல்வி இராஜாங்க அமைச்சரின் ஆசிச்செய்தி

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் என கேட்ட தாய்" என்ற குண்டு மீசைக்கிழவனின் கூற்றுக்கு இணங்க பேராசான் சுப்பிரமணியம் சயந்தன் அவர்களுக்கு மலர் முக மணிவிழா எடுப்பது உத்தமமான பொருத்தப்பாடாகும். போற்றுதற்குரிய பேராசானுக்கு வாழ்த்துப்பா ஒன்று கூறி அவருடனான நெருக்கத்தை இறுக்கமாக்கிக் கொள்வதில் உவகை கொள்கிறேன். வாழும் போதே வாழ்த்துவோம் என்பது தமிழர் பண்பாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. அந்த வகையில் இவ் உயர் சிந்தனையின் ஒப்புதற்குரிய பேராசானின் பெற்றோரான உயர்திரு சுப்பிரமணியமும் அவர்தம் பாரியார் தங்கரத்தினம் அம்மையாரும் பேறு பெற்றவர்களே...

மயிலிட்டி கலைமகளின் மடி தவழ்ந்து பின் பல்கலையும் கற்று பேராசானாய் உயர்ந்து ஊரிலும் உலகிலும் அவரது மாணவர் மனங்களிலும் நிலை கொண்டிருப்பதையிட்டு அதிசயித்து நிற்கிறேன். எண்ணிக்கையின் படியாக நீங்கள் ஓய்வானாலும் உங்களது வேட்கை தணிக்க முடியாதது என்பதை திடமாக நம்புகிறேன். மெய்யியல் அளவையியல் பேராசானே! நீவிர் சகாப்தம் கடந்தும் நிலைபேறாக நிலைத்திருக்க பரம்பொருளானவன் அருள் புரிவானாக...

கௌரவ.திரு.அருணாச்சலம் அரவிந்தகுமார் (M.P.)
பாராளுமன்ற உறுப்பினர் - பதுளை மாவட்டம்
கல்வி இராஜாங்க அமைச்சர்



## முன்னாள் பீடாதிபதியின் வாழ்த்துரை

உயர்திரு சுப்பிரமணியம் சயந்தன் அவர்களின் அறுபதாவது அகவைப் பூர்த்தியையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஆசிரியராக, உப அதிபராக, பிரதி அதிபராக, பதில் அதிபராகப் பணியாற்றி இன்று இளைப்பாறுகின்ற சயந்தன் தனது பணியில் ஆளுமை மிக்கவராக விளங்கியமை மாணவர்களிடையே அவருக்கு பெருமையைத் தேடித்தந்தது எனக் கூறினால் அது மிகையாகாது. சயந்தன் அவர்கள் பாடசாலை மாணவராக இருந்த காலத்திலிருந்தே அவரது படி நிலை வளர்ச்சியைக் கண்டு பெருமிதமடைந்திருக்கின்றேன். அவரது தன்னடக்கம் கல்விச் சமூகத்தவரிடையே அவருக்கென கௌரவத்தைப் பெற்றுக் கொடுத்தது எனக் கூறினால் அதில் ஐயமில்லை.

இத்தகைய பெருமைக்குரிய உயர்திரு.சயந்தன் அவர்கள் நல்ல உடலாரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் குடும்பத்தவருடன் வாழ்ந்து சமூகத்துக்கு மேலும் சேவையாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டிநிற்கின்றேன். வாழ்க வளமுடன் என, வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் க.தேவராஜா, முன்னாள் பீடாதிபதி.
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்.
யாழ்.பல்கலைக்கழகம்.



## வவுனியாப் பல்கலைக்கழக முதலாவது துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி

நான் கா.பொ.த. உயர்தரம் கல்வி கற்கின்ற வேளையில் சயந்தன் ஆசிரியரிடம் அளவையியலும் விஞ்ஞானமும் என்ற பாடத்தினைக் கற்றேன். இவர் அந்தப் பாடத்தினை சிறப்பாக போதிக்கின்ற ஆற்றலைக் கொண்டிருந்தவர். அவர் எனது குருவாக இருந்தமையையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். நான் கல்வி கற்ற ஆசிரியர்களில் அவர் மாணவர்களுக்கான சிறந்த முன்மாதிரியான ஆசிரியராக இருந்தமை என்னையும் கல்வித் துறையில் ஊக்குவித்தது என்பதனைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அவரது சேவை மென்மேலும் தொடர வாழ்த்துவதோடு, என்றும் நலமுடன் வாழ்க்கைப் பயணத்தை தொடரவும் மனதார வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர். த. மங்களேஸ்வரன்
முன்னாள் துணைவேந்தர்.
வவுனியாப் பல்கலைக்கழகம்.



## இணைத் தலைவர்களின் வாழ்த்துச்செய்தி



ஆசிரியர் சயந்தனிடம் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் 1986 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை அளவையியல் கற்ற மாணவர்கள் மணிவிழா எடுக்கும் இத் தருணத்தில் ஆசானிடம் 1985 இலிருந்து தனியார் கல்வி நிலையங்களில் கற்ற மாணவர்களும் 2014 முதல் அருணோதயாக் கல்லூரியில் கற்ற மாணவர்களும் இணைந்து கொண்டதில் மகிழ்ச்சி.

உலகளாவிய ரீதியில் பரந்துவாழும் அவரின் மாணவர்கள் சார்பில் பேராசான் சயந்தன் அவர்கள் நீடூழி வாழ்ந்து கற்பித்தல் பணியிலும் சமூகப் பணியிலும் அவர்தம் சேவை தொடர இறையாசி வேண்டுகின்றோம்.

| | |
|---|---|
| R.P. சர்மா, | மா.ரூபவதனன், |
| ஆசிரியர், | தலைவர்,முதுநிலை விரிவுரையாளர், |
| மகாஜனக் கல்லூரி, | பொதுசன நிர்வாகத்துறை, |
| க.பொ.த.உ/த-1987 | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், |
| | க.பொ.த.உ/த-1997 |

### யாழ்.பல்கலையில் ஆரம்பமான
# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கை நெறி



(யாழ்ப்பாணம்)
யாழ்.பல்கலைக்கழகம் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம் கல்வியியல் துறை , கலைப் பீடத்துடன் இணைந்து நடத்தும் முன்பள்ளி கல்வி டிப்ளோமா கற்கைநெறி 2024/2025 அங்குரார்ப்பணமும் திசை முகப்படுத்தல் நிகழ்வும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணியளவில் இடம் பெற்றிருந்தது.

கல்வியற்துறை விரிவுரையாளர் கலாநிதி விஜயபாஸ் கரனின் தலைமையில் ஆரம்பமாகிய குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக, துணைவேந்தர் பேராசிரியர் சி.சறிசற்குணராஜா உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (6-299)

# மாவட்ட செயலகத்தில் முகவர்களுடனான கலந்தாராய்வு

(யாழ்ப்பாணம்)
ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக யாழ்.தேர்தல் மாவட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுடனான கலந்துரையாடல் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ம.பிரதீபன் தலைமையில் நேற்று காலை 9. 30 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர், எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் ஒரு கட்டமாக முகவர்களின் பிரசன்னத்துடன் அஞ்சல் வாக்களிப்பு சிறப்பாக நிறைவடைந்துள்ளதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக தமது நன்றியினைத் தெரிவித்ததுடன், போட்டியிடும் வேட்பாளர்களில் 19 வேட்பாளர்களே இதுவரை அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களை நியமித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களுக்கும், யாழ். மத்திய கல்லூரியில் அமைக்கப்படவுள்ள 41 வாக்கெண்ணும் நிலையங்களுக்கும், 14 அஞ்சல் வாக்கெண்ணும் நிலையங்களுக்கும் மற்றும் பெறுபேறு தயாரித்து வெளியிடும் நிலையத்திற்கும் வேட்பாளர்களின் முகவர்களை உரிய எண்ணிக்கையில் சரியான பொறிமுறையூடாக சட்டத்தின் வழி நியமித்து நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறுவதனை உறுதிப்படுத்துவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட சிறப்பான ஒத்துழைப்பினை நல்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர் கேட்டுக் கொண்டார். (6-33)

### துப்பாக்கிப் பிரயோகம்
## ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)
கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட படோவிட்ட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயமடைந்த நபர் உயிரிழந்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூடு நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இனந்தெரியாத இருவர் படோவிட்ட நான்காம் பிரிவில் உள்ள வீடொன்றுக்கு முன்பாக வைத்து நபரொருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து, காயமடைந்த நபர் சிகிச்சைக்காக களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தெஹிவளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (6)



வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா நேற்றுக்காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

பல அடியவர்கள் தூக்குக் காவடி, அங்கப் பிரதிஸ்டை, பாற்குடம் போன்ற பல்வேறு நேர்த்திக் கடன் களையும் நிறைவேற்றினர். படம்:மகாலிங்கம்

## அளவையியல், மெய்யியல் பேராசானின் மணிவிழா

(யாழ்ப்பாணம்)
அளவையியல், மெய்யியல் பேராசான் சுப்பிரமணியம் சயந்தனின் மணிவிழா நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் திருமண மண்டபத்தில் இடம் பெறும்.

யாழ்.பல் கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் முன்னிலை வகிக்க யாழ்/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை ஆசிரியர் ஆர்.பி. சர்மா மற்றும் ஊவா வெல்லஸ பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம், தலைவர், முதுநிலை விரிவுரையாளர் பொதுசன நிர்வாகத் துறை மா.ரூபவதனன் ஆகியோர் இணைத் தலைமையில் நடைபெறும். (6)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்.
திருமதி. மகேஸ்வரி மங்களம்



மகாஜனன், முன்னாள் அதிபர், எமது வகுப்புத் தோழன் திரு. மணிசேகரன் அவர்களின் அன்புத்தாயாரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!

அன்னையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சிதம்பரேஸ்வரைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில்: 09.03.1936 விண்ணில்: 13.09.2024

1982 A/L நண்பர்கள் சார்பாக தங்க. முகுந்தன்.


# இராசிபலன்

17.09.2024
புரட்டாதி 01, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 11.29 மணிவரை.

சதயம் பிற்பகல் 2.33 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் -03.03-04.33 மணிவரை

பூரணை விரதம்
சந்திராஷ்டமம்.
புநர்பூசம்,பூசம்.

வளவன்

**மேஷம்** – எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** – மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், உதவி செய்வதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**துலாம்** – பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எண்ணங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்** – காணாமல் போன பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**ரிஷபம்** – வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், அரச வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** – மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**விருச்சிகம்** – பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** – உடல் நலனில் கவனம் தேவை, சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்** – உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள், மனித தெய்வ வழிபாடு மகத்துவம் தரும், கொள்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**கன்னி** – நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றிதரும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், ஆரோக்கியம் சீராகும்.

**தனுசு** – குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும் ,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்** – தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

கொடுக்கிற கை எடுக்கிற கைக்கு மேலாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி நிலையிலிருந்து இலங்கை விடுபடவில்லை

## ஐ.எம்.எப் திணைக்கள பணிப்பாளர்

**(ஜெனிவா)**

**நாடு இன்னும் பொருளாதார ஆபத்தில் இருந்து மீளவில்லை. சிரமங்களுக்கு மத்தியில் கிடைத்த வெற்றிகளைப் பாதுகாப்பது முக்கியம் என குறிப்பிடும் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக் களத்தின் பணிப்பாளர் ஜுலி கொசெக், அதனை எதிர்வரும் தேர்தலில் இலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டும் எனவும் தெரிவித் துள்ளார்.**

சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப் பாளர் ஜுலி கொசெக் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் கடன் நிலைபேற்றுத்தன்மை மதிப்பீடு தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த ஜுலி கொசெக் இதற்கான எனது பதில் எனது முந்தைய பதில்களைப் போலவே உள்ளது.

முதலில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கை மக்களே தீர்மானம் எடுக்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் பார்வையில், இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட வேலைத் திட்டம் கணிசமான முன்னேற்றத்தை அடைந்திருப்பதைக் காணலாம். ஆனால் இலங்கை தனது வரலாற்றில் எதிர்கொண்ட மிக மோசமான நெருக்கடியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு, இந்த வேலைத்திட்டத்தின் மூலம் அடைந்த சாதனைகளை பாதுகாப்பது மிகவும் அவசியமாகும் என தெரிவித்தார். (6)

# இலங்கையின் பொருளாதாரம் இரண்டாம் காலாண்டில் வளர்ச்சி

## புள்ளி விபரத்திணைக்களம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு இரண்டாவது காலாண்டுக்கான இலங்கையின் பொருளாதாரம் 4.7 வீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது என மக்கள் தொகை கணக்கீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இரண்டாவது தேசிய கணக்கீட்டு மதிப்பினை வெளியிடும் போதே இதனை அறிவித்துள்ளது.

அதன்படி 2023 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2,768,293 மில்லியன் ரூபாயாக உயர்ந்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் விவசாய நடவடிக்கைகள், தொழிற்துறை பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சேவைப் பொருளாதார நடவடிக்கைகள் என்பன முறையே 1.7 சதவீதம், 10.9 சதவீதம் மற்றும் 2.5 சதவீதம் நீர்வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. (6)

# 98 சதவீத வாக்குச் சீட்டுகள் நாடளாவிய ரீதியில் விநியோகம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இதுவரை 98% வாக்குச் சீட்டுகள் விநியோகிக் கப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகளை இதுவரை பெற்றுக் கொள்ளாத நபர்கள், தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் நாளை முதல் 21 ஆம் திகதி வரை அருகிலுள்ள தபால் நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என தபால் மா அதிபர் பி.சத்குமார தெரிவித்துள்ளார்.

தபால் துறை மொத்தம் 17.1 மில்லியன் வாக்குச் சீட்டுகளைப் பெற்றுள்ளது.

மேலும், திணைக்களம் 694, 000 தபால் வாக்குச் சீட்டுகளைப் பெற்றுள்ளது. இவை அனைத்தும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் பி.சத்குமார உறுதிப் படுத்தினார் மேலும் 2024 ஜனாதிபதித் தேர்தலின் போது 712, 319 அரசதுறை ஊழியர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (6)

# வவு. பெண்களுக்கான விசேட புனர்வாழ்வு நிலையம்

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான பெண்களுக்கு புனர்வாழ்வு வழங்கும் விதமாக விசேட நிலையமொன்றை நிறுவுவதற்கு புனர்வாழ்வு பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில் வவுனியா பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குறித்த புனர்வாழ்வு நிலையத்தில் 100 பெண்கள் வரையில் புனர்வாழ்வளிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக போதைக்கு அடிமையான பெண்களுக்கு இந்த நிலையம் ஊடாக மறுவாழ்வு அளிக்கதிட்டமிடப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கு, இது தொடர்பில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இதன்படி, போதைப்பொருளுக்கு அடிமையான பெண்களை வவுனியாவில் அமைந்துள்ள இந்த புதிய புனர்வாழ்வு நிலையத்திற்கு புனர்வாழ்விற்காக பரிந்துரைக்குமாறு நீதிச்சேவை ஆணைக்குழு அனைத்து நீதி பதிகளுக்கும் அறிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (6)

## பெயர்மாற்ற அறிவித்தல்

1 ஆம் வட்டாரம் மண்டைதீவில் வசிக்கும் வரதராசா ஜெயமதிகாந்தி எனும் பெயரை 17.09 .2024 இன்று முதல் ஸ்ரீமதிசாந்தி என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்து வேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

**தங்கள் உண்மையுள்ள, வ.ஸ்ரீமதிசாந்தி.**


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்: ரோகினி
1இல் செவ்
கி.பா: 58
உயரம்:5'4"
தகைமை/தொழில்: Diploma in Hotel Managment, Canada
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/14777

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 19 1/2
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: HND IT, Receptionist
எதிர்பார்ப்பு: அரச, தனியார் வேலை
தொ.இ: B/14779

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்: திருவோணம்
7 இல் செவ்
கி.பா: 30
உயரம்:5'7"
தகைமை/தொழில்: O/L, தையல்கடை(சொந்தம்)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14780

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:1999-இந்து
நட்சத்திரம்: விசாகம்
9இல் செவ்
உயரம்: 5'3"
தகைமை/ தொழில்: BBA, Bank
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14729

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
12 இல் செவ்
உயரம்: 5'3"
தகைமை/ தொழில்: BA, Teacher
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/14730

பிறப்பு-1998- இந்து
நட்சத்திரம்: ரோகினி
8 இல் செவ்
கி.பா: 17 1/2
உயரம்: 5'3"
தகைமை/ தொழில்: BA, Teacher
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14732

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இந்தியாவுடனான உறவில் எந்த பிரச்சினையும் இல்லை

## மாலைதீவு வெளியுறவுத்துறை அமைச்சர்



(மாலே)


இந்தியா - மாலைத்தீவு இடையே அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த மோதல் போக்கு தற்போது முடிவுக்கு வந்துள்ளதாகவும், இரு நாடுகளுக்கும் இடையேயான தவறான புரிதல்கள் தற்போது தீர்த்து வைக்கப் பட்டு விட்டன எனவும் மாலைத்தீவின் வெளியுறவுத்துறை அமைச்சர் மூசா ஜமீர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது' மாலைத்தீவில் இருந்து இந்தியப்படைகளை வெளியேறும்படி, ஜனாதிபதி முகமது முய்சு உத்தரவிட்டதை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடை யேயான உறவில் விரிசல் ஏற்பட்டது.

எங்கள் அரசின் ஆரம்ப காலத்தில், இந்தியாவுடன் கசப்பான உறவு இருந்தது என்பது அனைவருக்கும் தெரியும். இந்தியா - மாலைதீவு இடையே இருந்த தவறான புரிதல்கள் தற்போது தீர்த்து வைக்கப்பட்டுவிட்டன.

சீனா மற்றும் இந்தியாவுடன் நாங்கள் நல்ல உறவைக் கொண்டுள்ளோம். இரு நாடுகளும் மாலைதீவை ஆதரிக்கின்றன. இவ்வாறு மாலைதீவின் வெளியுறவுத்துறை அமைச்சர் மூசா ஜமீர் கூறியுள்ளார்.(6)

# டிஜிற்றல் மீடியாவை பயன்படுத்த கட்டுப்பாடுகள்



(ஸ்டாக்ஹோம்)

2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் டிஜிற்றல் மீடியாவை பயன்படுத்த வேண்டாம் என சுவீடனின் சுகாதார அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளனர்.

2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் எந்த டிஜிற்றல் மீடியாவையும் பயன்படுத்த வேண்டாம் என்று சுவீடனின் பொதுச்சுகாதார அதிகாரிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பரிந்துரைத்துள்ளனர். ஏனெனில் பெற்றோர்கள், குழந்தை மருத்துவர்கள் மற்றும் அரசாங்கம் தொழில்நுட்பத்தால் நிறைந்த இன்றைய உலகின் சவால்களுக்கு பதிலளிக்க போராடுகிறார்கள்.

எனவே நாங்கள் மீண்டும் சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்று சமூக விவகாரங்கள் மற்றும் பொதுச் சுகாதாரத்துறை அமைச்சர் ஜேக்கப் ஃ போர்ஸ்மெட் கூறினார். மேலும் குழந்தைகளுக்கு வித்தியாசமான குழந்தைப் பருவத்தைப் பெறுவதற்கான வழிகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மொபைல் போன் அருகில் இருந்தாலே மாணவர்கள் தங்களது கவனத்தை இழக்க நேரிடும் என்றும் யுனெஸ்கோ கூறியுள்ளது.(6)

# வெற்றிகரமாக பூமிக்கு திரும்பிய 'ஸ்பேஸ் எக்ஸ்' சுற்றுலா விண்கலம்



(வோஷிங்டன்)

எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் போலாரிஸ் டான் குழுவினர் விண்வெளியில் ஐந்து நாள் பயணத்தை முடித்துக் கொண்டு பூமிக்கு பத்திரமாகத் திரும்பினர். புளோரிடா கடலில் டிராகன் கேப்ஸ்யூல் லேண்ட் ஆனது. இதனை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் சமூக வலைத்தளப் பதிவு மூலம் பகிர்ந்துள்ளது.

வணிகரீதியான விண்வெளிப்பயணத்தில் இது மைல்கல் சாதனை என நாசா தெரிவித்துள்ளது. இந்தப் பயணத்தில் கோடீஸ்வரர் ஜசக்மேன், ஓய்வு பெற்ற அமெரிக்க விமானப் படைவீரர் ஸ்கார் போடீட் மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன ஊழியர்கள் ஷாரா கில்லீஸ், அன்னா மேனன் ஆகியோர் அங்கம் வகித்தனர். கடந்த 11 ஆம் திகதி இவர்களது விண்வெளிப் பயணம் தொடங்கியது.

பூமிக்கு மேலே சுமார் 700 கிலோ மீற்றர் உயரத்தில் இவர்கள் விண்வெளி நடை பழகினர். அதுவும் தொழில்முறை விண்வெளி வீரர்கள் அல்லாத ஜசக் மேன், ஷாரா கில்லீஸ் ஆகியோரும் விண்வெளியில் மிதந்தபடி நடை மேற் கொண்டனர். இந்தப்பயணத்தில் சுமார் 36இற்கும் மேற்பட்ட விஞ்ஞான ரீதியிலான சோதனைகளை மேற் கொண்டனர். முக்கியமாக 1972 அப்போலோ மிஷனுக்கு பிறகு விண்வெளியில் அதிக தூரம் பயணித்து சாதனை படைத்தனர். சுமார் 1400 கிலோ மீற்றர் தூரம் வரை அவர்களது பயணம் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமை...

கொ...

## துப்பாக்கி...

## (வோஷிங்டன்) = அமெரிக்க முன்... ட்ரம்பை குறிவைத்து... தாக்குதல் முயற்சி... ஏற்படுத்தி உள்ளது...

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள நிலையில், குடியரசுக் கட்சி சார்பாக வேட்பாளராக களமிறங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நேற்று, புளோரிடா மாநிலம், மேற்கு பாம் பீச் பகுதியில் அமைந்துள்ள ட்ரம்ப் சர்வதேச கோல்ப் கிளப்புக்கு சென்று, கோல்ப் விளையாடி கொண்டு இருந்துள்ளார்.

இதன்போது அவரை இலக்... நடத்த...

எ... ருக்கு... ஏற்ப... விக்க... தைய... 53 வ... செய்ய... அவரி... துப்பா... கமெரா... கள் ... பாம் ...

# கல்வி இன்றி தவிக்கும்...

## 625,000 மாணவர்கள் காசாவில்...



(ஜெருசலேம்)

காசாவில் போர் ஆரம்பித்து முதலாம் ஆண்டு முடிவடைய உள்ள நிலையில், கல்வியின்றி மாணவர்கள் தத்தளித்து வருகின்றனர்.

இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் காசாவில் 70% பள்ளிகள் சேதமடைந்துள்ளன. மேலும் 6,25,000 மாணவர்கள் எந்தவிதமான கல்விச் சேவையுமின்றி போர்ச் சூழலில் வாழ்ந்து வருகின்றனர்.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்தப் போர்ச்சூழல் ஒரு நாள் முடிவுக்கு வரும் என்று நம்பிக்... வைத்து தாங்கள் வாழ்ந்த பகு...யில் விட்டுச்சென்ற புத்தகங்க... நோட்டுகள் போன்றவற்றை... தேடிச் சேகரிக்கும் பணியில் ஈ...பட்டு வருகின்றனர்.


தொடர்ந்து நடத்தப்ப... தாக்குதலின் விளைவாக ஓரி... விட்டு மற்றோர் இடத்திற்கு நக... ஆசிரியர்கள் தங்களால் இய... அளவு அங்குள்ள மாணவ...ளுக்கு கல்வியைக் கற்று... கொடுக்கும் பணியிலும் ஈடுப... வருகின்றனர். (...


# ரிக்காவில் ட்ரம்பை

# ல்ல மீண்டும் முயற்சி

## கிச் சூடு நடத்தியவர் கைது

**ன்னாள் ஜனாதிபதி டொனால்ட் த்து மீண்டும் துப்பாக்கிச் சூட்டு சிச் சம்பவம் அதிர்வலைகளை ாது.**





இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

எனினும், இதனால் அவருக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தையடுத்து சந்தேக நபரான 53 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் அவரிடமிருந்து ஏ.கே. 47 துப்பாக்கி, ஒரு கோப்ரோ கமெரா உள்ளிட்ட சில பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பாம் பீச் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் மீதான கொலை முயற்சி என சந்தேகிக்கப்படும் இந்த துப்பாக்கிச் சூடு குறித்து மத்திய சட்ட அமுலாக்கப் பிரிவினர் தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடம் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் ட்ரம்ப் மற்றும் அவரைச் சூழவுள்ளவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சட்ட அமுலாக்கப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஏற்கனவே, கடந்த ஜூலை மாதம் பென்சில்வேனியாவின் பட்லர் பகுதியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையில் பங்கேற்றிருந்த ட்ரம்ப் மீது, துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதன் போது துப்பாக்கிக் குண்டு அவருடைய வலது காதின் மேற்பகுதியை துளைத்து சென்றதோடு, இந்த சம்பவம் பெரும் பரபரப்பையும் அங்கு ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையிலேயே மீண்டும் ட்ரம்பை இலக்குவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்களின் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பாக கேள்வியை எழுப்புவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (6)



## பெபின்கா சூறாவளியின் தாக்கம் ரத்தான 100 விமான சேவைகள்



(பீஜிங்)

கிழக்கு சீனாவின் கடற்கரைப்பகுதியில் இருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் பெபின்கா சூறாவளி மையம் கொண்டுள்ளது. இந்த சூறாவளி சுமார் 151 கி.மீ. வேகத்தில் கரையை கடக்கும் என சீன வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் கிழக்கு கரையோரப் பகுதிகளில் 254 மி.மீ. அளவிலான மழைப் பொழிவு பதிவாகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து, முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக [illegible] ஷாங்காய் நகரில் இருந்து சுமார் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில், மோசமான வானிலை காரணமாக ஷாங்காய் நகரில் உள்ள விமான நிலையங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

பெபின்கா சூறாவளி கரையைக் கடக்கும் வரை சுமார் 600 விமானங்கள் ரத்து செய்யப்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. வானிலை சீரானதும் விமான சேவை மீண்டும் [illegible] (6)

## இடிந்து விழுந்த சுவர் 281 கைதிகள் தப்பியோட்டம்



(அப்யூஜா)

நைஜீரியாவில் சிறைச்சாலையின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததால், கைதிகள் தப்பிவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


நைஜீரியாவில் தொடர் கன மழையால் மைடுகுரி நகரின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. இதனால், அந்தப் பகுதியில் உள்ள சிறைச்சாலையின் சுற்றுச்சுவர் இடிந்ததையடுத்து, சிறையில் அடைக்கப்பட்டிருந்த 281 கைதிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, தலைமறைவான கைதிகளை தேடும் பணிகளை காவற்துறையினர் முடுக்கிவிட்டனர்.

இதையடுத்து, 7 கைதிகள் மட்டும் பிடிக்கப்பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர். மீதமுள்ளவர்களைத் தேடும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக காவற்றுறையினர் தெரிவித்துள்ளனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை சுமையினை குறைப்பதே எனது இலக்கு

## ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

வீழ்ச்சியில் இருந்து மீட்டு நாட்டை கட்டியெழுப்புவதே எனது நோக்கமாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். இயலும் ஸ்ரீலங்கா வெற்றிப் பேரணி சுயாதீன வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையில் திருகோணமலை கந்தளாய் பகுதியில் நேற்று இடம் பெற்ற பிரசாரத்தின் போதே இவ்வாறு தெரிவித்தார்

பிரதமர் பதவிக்கு இடைவெளி காணப்பட்ட முதலாவது நாடாக அன்று இலங்கை பதிவானது. பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு அப்போதைய ஜனாதிபதி பலரிடம் கோரியிருந்தார். ஆனால் எவருமே அதற்கு முன்வரவில்லை. இறுதியில் நாட்டைப் பொறுப்பேற்குமாறு எனக்கு அழைப்பு விடுத்தார்கள். பிரதமராகி பின்னர் ஜனாதிபதியாக இந்த நாட்டை பொறுப்பேற்றேன்

வீழ்ச்சியில் இருந்த நாட்டை மீட்க நான் அதற்கான திட்டங்களைக் கட்டம் கட்டமாக முன்னெடுத்துள்ளேன். நாட்டு மக்களுக்கு பல நிவாரணம் வழங்கி வருகிறோம். அரச மற்றும் தனியார் துறையினரின் சம்பளத்தினையும் அதிகரித்துள்ளோம். மேலும் இந்த நாட்டில் ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு செல்ல வேண்டும் வாழ்க்கை சுமையினை குறைப்பதே எனது பிரதான எதிர்ப்பார்ப்பாகும்" என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மேலும் தெரிவித்தார். (6)

# இராஜாங்க அமைச்சர் பயணித்த வாகனத்துடன் மோதிய கார்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரி செலுத்திச் சென்ற கார் ஒன்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பயணித்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் - சிலாபம் வீதியில் பாலவிய பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து காரினைச் செலுத்திச் சென்ற பொலிஸ் அதிகாரி புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் பொலிஸ் அதிகாரி மதுபோதையில் காரை செலுத்தினாரா என்பது குறித்து, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)

# பிரசாரத்தில் சிறுவர்களை ஈடுபடுத்துவதாக முறைப்பாடு

(கொழும்பு)

காத்தான்குடி பிரதேசத்தில் பாடசாலைச் சிறுவர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை கடந்த 24 மணி நேரத்தில் 184 முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் ஜூலை 31ஆம் திகதியில் இருந்து செப்ரெம்பர் 15 ஆம் திகதி வரை முறைப்பாடுகளின் எண்ணிக்கை 4,215 ஆக அதிகரித்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி 1,360 முறைப்பாடுகள் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கும் 2,855 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 30 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# இன்று ஒரு தகவல் 224



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## பலா

கொஞ்ச நாளைக்கு முன்பு பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். வேற ஒன்றுமில்லை கேரளாவிலே ஒற்றைப் பாலத்திற்கு பக்கத்தில ஒரு யானை வந்து கொண்டு இருந்ததாம். அதனுடைய வயது 25. பார்ப்பதற்கு வாட்ட சாட்டமாக இருந்தது. யானைப்பாகனும் கூடவே வந்து கொண்டு இருந்தான்.

வழியிலே ஒரு பலாப்பழம் குவிந்து கிடந்ததாம். மழைக்காலம் ஆரம்பம். அதனால் அந்த சமயத்தில் அதனுடைய விலை மிகவும் மலிவு. யானைப்பாகன் பார்த்தார். இது தான் சமயம் என்று நினைத்து பலாப்பழத்தை குறைந்த விலையில் வாங்கி யானைக்கு கொடுத்து இருக்கிறார். யானையும் சளைக்காமல் சாப்பிட்டுக்கொண்டு இருந்திருக்கிறது. எத்தனை? 12 பழத்தை வரிசையாக முழுங்கி விட்டது.

அது வரைக்கும் ஒன்றும் பிரச்சினை இல்லை. ஒரு நான்கு மணிநேரம் போன பின்பு தான் பிரச்சினை ஆரம்பம். வயிற்றுவலி ஆரம்பமாகிவிட்டது. ஒரே கத்தல். யானை கத்தினால் எப்படி இருக்கும். கத்திக் கொண்டே யானை அங்குமிங்கும் ஓட ஆரம்பித்து விட்டது.

பாகனுக்கும் ஒன்றும்புரியவில்லை.கடைசியிலே வைத்திய நிபுணர்கள் எல்லாம் வந்து அந்த யானைக்கு மயக்க ஊசி எல்லாம் போட்டு ஜீரணமாவதற்கு வேண்டிய சிகிச்சை எல்லாம் செய்து குணப்படுத்தி விட்டார்கள். ஆறு மணிநேரத்திற்கு பின்பு அப்பாடா என்று யானை கண்ணை திறந்து பார்த்திருக்கிறது. பலாப்பழத்தில சில சத்துக்கள் எல்லாம் இருக்கிறது உண்மை தான். இருந்தாலும் அளவுக்கு மிஞ்சி சாப்பிட்டால் அஜீரண மாகிவிடும்.

யானைக்கு மட்டுமில்லை நமக்கும்தான். ஏற்கனவே அஜீரணக் கோளாறு உள்ளவர்கள் அதைப் பார்த்து விட்டு சாப்பிடாமல் இருப்பது நல்லது. பலாப்பிஞ்சு பித்த நோயை போக்குமாம். ஆண்மை சக்தியைப் பெருக்குமாம். பலா வேரை இடித்து நீரிலே காய்ச்சி வடித்து எடுத்துக் கொள்ள வேண்டியது. இது ஒரு மருந்து. இதிலே சில சொட்டுக்களை மூக்கிலே விட்டால் சளி தலைவலி இது எல்லாம் இல்லாமல் போய்விடுமாம்.

பலாக் கொழுந்து இருக்கிறது அல்லவா அதை எடுத்து அரைத்து சிரங்குகள் மேலே போட்டால் சுகமாக இருக்கும். பலா மரத்துப் பாலை வீக்கங்கள் மேல் தடவினால் அது சரியாகப் போய்விடும்.

இப்படியெல்லாம் மருத்துவ குணங்கள் இருந்தால் கூட பலாப்பழத்திலே பொதுவாக ஊட்டச்சத்து குறைவாகத்தான் இருக்கிறது. முக்கியமாக இதுவே கரோட்டீன் விற்றமின் சி இது எல்லாம் இருக்கிறது. கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, பொட்டாசியம் இது எல்லாம் கூட இருக்கிறது.

இருந்தாலும் என்ன செய்வது. அதிகமாக சாப்பிட்டால் அந்த யானை மாதிரி அவஸ்தைப்பட வேண்டியிருக்கிறது.

அதெல்லாம் இருக்கட்டும் . ஒரு பலாப்பழத்தை வெட்டிப் பார்ப்பதற்கு முன்னால் எத்தனை சுளை இருக்கிறது என்று கண்டு பிடிக்க முடியுமா? அது எப்படி முடியும் என்று யோசிக் - கின்றீர்களா. முடியும் என்று சொல்கிறது கணக்கதிகாரம் என்கின்ற சோழர் கால நூல் ஒன்று. அது என்ன சொல்கிறது தெரியுமா?

**"பலாவின் களையறிய வேண்டுதிரேல் ஆங்கு**
**சிறுமுள்ளுக் காம்பரு கெண்ணி– வருவதை**
**ஆறிற் பெருக்கியே ஐந்தினுக் கீந்திடவே**
**வேறென்ன வேண்டாஞ் சுளை"**

அப்படி என்கிறது.

அதாவது ஒரு பலாப்பழத்தை பார்த்தவுடனே அதனுடைய காம்புக்கு பக்கத்திற்கு உள்ள சின்ன முள்ளு எத்தனை என்று எண்ண வேண்டுமாம்.

அதை ஆறாலே பெருக்கி ஐந்தாலே வகுக்க வேண்டுமாம். என்ன விடை வருகிறதோ அத்தனை சுளை தான் அந்த பழத்திற்குள்ளே இருக்குமாம். முடிஞ்சவர்கள் சோதனை செய்து பாருங்கள்.

ஒரு கதை தெரியுமா உங்களுக்கு. ஒரு ஊரில் ராஜா இருந்தார். அவருக்கு பிறந்த நாள் வந்தது. அரண்மனையில் அவர் உட்கார்ந்து இருந்தார். அரண்மனைக்கு வெளியில் ஒரு பெரிய கியூ. முக்கியமானவர்கள் எல்லோரும் அரசரைக் கண்டு விட்டு போவதற்கு காத்துக் கொண்டு இருந்தார்கள். அவர்களாலே எது எது முடியுமோ அதை அரசருக்கு கொடுத்து வணங்கிப் போவது வழக்கம். ஆனால் ராஜா எப்படி என்றால் மூடி டைப். சில நேரம் சந்தோசமாக இருப்பார். சில நேரம் வித்தியாசமாக நடந்து கொள்ளுவார்.

அன்றைக்கு பார்த்து அவருக்கு மூடு சரியில்லை. வரிசையிலே நின்ற ஒருவர் முதலாவதாக உள்ளே போனார் கையிலே உள்ள எலுமிச்சம்பழத்தை ராஜா கையிலே கொடுத்தார்.

ராஜவோ மூடுதான் சரியில்லையே! அதனாலேயே அவர் அந்த பழத்தை வாங்கினார். உடனே அதை கொடுத்தவர் வாயைத் திறக்கச் சொன்னார். அவர் வாயிலே அந்தப் பழத்தை வைத்து அடைத்து ஒரு நாள் பூராகவும் இருக்க வேண்டும் என்று என்று உத்தரவு போட்டார்.

எலுமிச்சம்பழம் கொடுத்தவர் அதிர்ச்சி அடைய வேண்டும் அல்லவா... அடையவில்லை. அதற்குப் பதிலாக சிரிக்க ஆரம்பித்து விட்டார். ராஜாவிற்கு இன்னமும் கோபம் . ஏன் சிரிக்கிறீர் என்றார்.அதற்கில்லை மன்னா எலுமிச்சம் பழத்தை என்னுடைய வாய்க்குள்ளே ஒரு நாள் முழுவதும் வைத்திருப்பது எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. ஆனால் அரண்மனைக்கு வெளியிலே நிற்கின்ற கியூவிலே ஒருவர் ஒரு பெரிய பலாப்பழத்தை வைத்துக் கொண்டு நின்று [illegible] அவருடைய நிலைமை என்ன ஆகும் என்று நினைத்துப் பார்த்தேன். அதுதான் சிரிப்பு வந்துவிட்டது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் 90,607 பேர் வாக்களிக்க தகுதி

(மன்னார்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது இம்முறை மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள தாக மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் கனக சபாபதி கனகேஸ்வரன் தெரி வித்தார்.

மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 21ஆம் திகதி இடம் பெற உள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது வன்னி தேர்தல் தொகுதியான மன்னார் மாவட்டத்தில் தேர் தல் நடவடிக்கைகளுக்கான சகல ஏற்பாடுகளும் முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். மேலும் 98 வாக்களிப்பு நிலையங் களில் வாக்களிப்பு இடம் பெற வுள்ளது.

தேர்தல் குறித்து 20 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்து முறைப் பாடுகள் அனைத்தும் வன் முறையுடன் தொடர்புபட்டதாக இல்லை.

தேர்தல் குறித்து முறைப் பாடுகள் கிடைக்கும் பட்சத் தில் மாவட்டச் செயலகத்தின் முறைப்பாட்டுப் பிரிவு இலக்கமான 023-2222215 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தேர்தல் தொடர்பான முறைப்பாடு களை தெரிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித் தார். (6)

# சர்வதேச ஓசோன் தினத்தை முன்னிட்டு பனம் விதைகள் நாட்டி வைப்பு



(மன்னார்)

சர்வதேச ஓசோன் தினத்தை முன்னிட்டு, இயற்கை மீதான மக்களின் புரி தலை அதிகரிக்கும் நோக்கில் நேற்றுமன்னாரில் பனம் விதைகள் நாட்டி வைக்கப் பட்டுள்ளன. செப்டம்பர் 16 ஆம் திகதி உலகளவில் அனுசரிக்கப்படும் சர்வதேச ஓசோன் தினத்தின் முக்கியத் துவத்தையும் பனை மரத்தின் பலன்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், அமிச்சி ஒருங்கிணைந்த பண்ணை ஊழியர்கள், மன்னார் தாழ்வுபாடு கடற் கரை பகுதியில் பனம் விதைகளை நாட்டிவைத் துள்ளனர்.

மேலும், கடற்கரை பகுதிக ளை பசுமையாக மாற்றும் நோக்கில், அமிச்சி ஒருங்கி ணைந்த பண்ணையின் சிரம தானச் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக, தொடர்ந்து பனம் விதைகள், தேக்கு, தென்னை போன்ற மரக்கன்றுகளும் நாட்டி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (6-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 150-200 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 180 | 180-200 | 300 |
| தக்காளி | 200 | 200 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 300 | 240 | 150 | 180 |
| கோவா | 250 | 280 | 300 | 270 | 320 |
| கரட் | 250 | 250 | 300 | 280 | 300 |
| பூசணி | 80 | 60 | 100 | 80 | 80 |
| புடோல் | 60 | 120 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 240 | 150-200 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 280 | 200 | 250 | 270 | 250 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 350 | 400 |
| வெண்டைக்காய் | 60 | 80 | 100 | 60-80 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 240 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 200 | 100 | 250-300 | 300 |
| லீக்ஸ் | 320 | 300 | 320 | 300 | 350 |
| பீற்றூட் | 100 | 120 | 100 | 50-70 | 150 |
| கறிமிளகாய் | 400 | 300 | 450 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 380 | 200 | 200-300 | 400 |
| போஞ்சி | 250 | 250 | 350 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | -- | -- | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 140 | 100 | 80-100 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 300 | 300-350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 140 | 120 | 80-120 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | -- | 620 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 130 | 120 | 150 | 80 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 70 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 | 150 |




**பிரீத்தி**

தினமும் 8 மணி நேரம் தூங்கினா ஆயுள் கூடும்ன்னு டாக்டர் சொல்றாரு



ஆனா நாம தினமும் 16 மணி நேரம் தூங்குறோமே அப்ப நம்ம ஆயுள் 150அ தாண்டிருமோ...

**சுதன்**

என்ன மாப்ள எப்ப பாத்தாலும் சண்டை போட்டுட்டே இருக்கீங்க



என்ன புள்ளபெத்து வச்சிருக்கிங்க பூரில எப்படி காத்து அடிக்கிறதுனு கேக்கிறாயா உன் பொண்ணு

**தனுஷா**




mom: நீ வாழ்க்கையில ரொம்ப கஷ்டப்படுவியாம்டா




me: என்கிட்ட கேட்டிருந்தா நானே சொல்லீருப்பன் இதுக்கு போய் ஜோசியர எல்லாம் பாத்திருக்கீங்க

**சரோன்**

me seeing celandar
ராசி பலன் - தடங்கல்



எனக்கு நீ 365 நாளும் வெற்றினு போட்டாலும் எனக்கு தடங்கல் தாண்டா நடக்கும்

**காவியா**

சார் ஒரு ஜாயிண்ட் அக்கவுண்ட் தொடங்கணும் அதுக்கு ரெண்டு பேரு வேணுமே சரி... ஒண்ணு நீங்க இன்னொரு ஆள் யாருங்க?



உங்க பேங்ல பெரிய தொகை வச்சிருக்கிறவங்க யாரோடாவது சேர்த்து விடுங்க

**அர்ஷா**

வக்கீலுக்கும் டாக்டருக்கும் என்ன வித்தியாசம்?



வக்கீல் சரியில்லைனா கேஸ் முடியாது டாக்டர் சரியில்லன்னா கேஸ் முடிஞ்சிரும் சார்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 582





18 ஆம் அத்தியாயம்
நிமித்தக்காரன்

நம்பியாண்டார் நம்பியை வரவேற்பதற்காகக் கூடியிருந்த சபை கலையும் சமயத்தில் பெரிய மகாராணி தம் செல்வக் குமாரனிடம், "மகனே! நான் இவர்களை அரண்மனை வாசல் வரையில் சென்று வழியனுப்பி விட்டு வருகிறேன். அதற்குள் நீ உன் இருப்பிடம் சென்று சிரமபரிகாரம் செய்து கொண்டு திரும்பி வா! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்!" என்றார்.

"ஆகட்டும், தாயே" என்று சொல்லிவிட்டு மதுராந்தகர் புறப்பட்டார். அரண்மனையில் அவர் தங்கியிருந்த பகுதிக்குப் போனார். அவருடைய உள்ளத்தில் ஆத்திரமும், அசூயையும் கொழுந்து விட்டு எரிந்தன. யாரோ வழியோடு போகிற ஆண்டிப் பண்டாரத்துக்கு எவ்வளவு தடபுடலான மரியாதைகள்! இராஜ குலத்தின் கௌரவத்துக்கே தம் தாயினால் பங்கம் நேர்ந்துவிடும் போலல்லவா இருக்கிறது! பழுவேட்டரையர்கள் தம் அன்னையைப் பற்றி அடிக்கடி குறை சொல்லுவதில் வியப்பு ஒன்றுமில்லை. உடம்பில் சாம்பலைப் பூசிக்கொண்டு ருத்திராட்ச மாலைகளை அணிந்து கொண்டு யார் வந்தாலும் பெரிய மகாராணிக்குப் போதும்! பதிகம் ஒன்றும், அவன் பாடிக் கொண்டு வந்துவிடவேண்டும் அல்லது கோயில், குளம், திருப்பணி என்று சொல்லிக் கொண்டு வந்துவிட வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு அள்ளிக் கொடுத்து இராஜாங்க பொக்கிஷத்தையே இவர் சூனியமாக்கி விடுவார் போலிருக்கிறது! போதாதற்கு இளவரசி குந்தவை ஒருத்தி எப்போதும் அருகில் இருக்கிறாள். கோவில் திருப்பணி செய்து மிச்சம் ஏதேனும் இருந்தால், அதை மருத்துவசாலை ஏற்படுத்துவதற்காகச் செலவிட்டு விடுகிறாள். இப்படியெல்லாம் இவர்கள் செய்வதற்கு இடம் கொடுத்து வந்தால் நாளை நம்முடைய மனோரதம் எப்படி நிறைவேறும்? சோழ சிம்மாசனத்தில் ஏறி நாலா திசைகளிலும் சோழ சைன்யங்களை அனுப்பி இந்த நில உலகம் முழுவதையும் வென்று ஒரு குடை நிழலில் ஆளுவது எவ்விதம் நடைபெறும்?

மறுபடியும், பெரிய மகாராணிக்கு மகனிடம் ஏதோ அந்தரங்கம் பேசவேண்டுமாம்! என்ன அந்தரங்கத்தைச் சொல்லப் போகிறாரோ, தெரியவில்லை! அஷ்டாங்க யோகம், இயம, நியம நிதித்தியாசனம் ஆகியவற்றைக் குறித்து ஒருவேளை பேச ஆரம்பித்து விடுவார். கண்களின் பார்வையை மூக்கு நுனியில் செலுத்திக் குண்டலினியை மேல் நோக்கிக் கொண்டு வருவதினால் அறுபத்து நாலு கலைகளையும் கல்லாமல் கற்கும் முறையைப் பற்றி ஒருவேளை உபதேசிக்க ஆரம்பித்து விடுவார்! அல்லது நடராஜருடைய ஆனந்தக் கூத்தின் உட்பொருளைக் குறித்தும் அவருடைய சடா மகுடம் எதைக் குறிக்கிறது, அவர் அணிந்திருக்கும் பிறை எதைக் குறிக்கிறது என்பவை குறித்தும் சொல்ல ஆரம்பித்து விடுவார். இப்படியெல்லாம் சொல்லிச் சொல்லித்தான் நம்மை உலகம் அரைப் பைத்தியம் என்று பரிகசிக்கும்படியான நிலைக் குக் கொண்டு வந்துவிட் டார். அம்மாதிரிப் பேச்சுகளுக்கு இனிமேல் இடம் கொடுக்கக்கூடாது. அவர் பேசித்தான் தீருவேன் என்றாலும், நாம் காதிலே வாங்கிக் கொள்ளக் கூடாது.

இருக்கட்டும்! அன்னை மீண்டும் கூப்பிட்டு அனுப்புவதற்குள் அந்த நிமித்தக்காரனிடம் பேசியாக வேண்டும். யாருமே அறிந்திருக்க முடியாத இரண்டு மர்மமான செய்திகளை அவன் எப்படி அறிந்து கொண்டான்? அதை நினைத்துப் பார்த்தால் ஒரே வியப்பாக அல்லவா இருக்கிறது! அதிசயமான சக்தி அவனிடம் ஏதோ இருக்க வேண்டும். சென்று போன நிகழ்ச்சிகளை அறிந்து கூறியது போல் வருங்காலத்தில் நடக்கப் போவதைப் பற்றியும் அவனால் கூற முடியுமா? அவனையே கேட்டுப் பார்த்து விடலாம். (தொடரும்)



சிறுவர் அரங்கம்



## திறமை மிக்க அமைச்சர்கள்



உச்சயினி என்ற சிறிய நாடு. அதை புண்ணிய சேனன் என்ற அரசன் ஆட்சி செய்தான். நாடு வளமாக இருந்தது. மக்களும் நலமாக வாழ்ந்து கொண்டிருந்தனர்.

அதைக் கண்டு பொறாமை கொண்டான். பக்கத்து நாட்டு அரசன் பராக்கிரமன் என்பவன். அவ்வப்போது, சிறு சிறு எல்லைச் சண்டைகளை ஏற்படுத்திக் கொண்டே இருந்தான் பகைவனான பராக்கிரமன்.

திடீரென ஒரு நாள், உச்சயினி நாட்டின் மீது முற்றுகையிட்டு விட்டான் அந்த பராக்கிரமன்.

உச்சயினியின் படை பலம் பகைவனுக்கு ஈடு கொடுக்கத் தக்கதாக இல்லை. எதிர்த்துப் போரிட்டால், நிச்சயம் தோல்வி ஏற்படும் என்பது அமைச்சர்களுக்கு நன்கு தெரியும். அதனால், அமைச்சர்கள் கூடி, ஆலோசனை நடத்தி ஒரு திட்டம் தீட்டி, அதன் படி செயற்பட்டனர். உச்சயினி அரசனையும் ராணியையும் மாறு வேடத்தில், பாதுகாப்பான இடத்தில் மறைத்து வைத்தனர்.

பிறகு, அரசனும் ராணியும் இறந்து விட்டதாக செய்தியை எங்கும் பரவச் செய்தனர். இறுதிச் சடங்கைச் செய்வது போல ஒரு பாசாங்குச் சடங்கையும் செய்து முடித்தனர்.

தங்கள் அரசனும் ராணியும் இறந்து விட்டதால், இனி போர் புரிய அவசியம் இல்லை. உச்சயினி நாட்டின் ஆட்சியை தாங்களே ஏற்று நடத்தலாம் என்று கேட்டுக் கொள்வதாக, பகை அரசனான பராக்கிரமனுக்கு சமாதானத் தூது அனுப்பினார்கள் அமைச்சர்கள்.

போர் புரியாமலேயே வெற்றி கிடைத்து விட்டதாக பெருமகிழ்ச்சியில், உச்சயினி அமைச்சர்கள் அனுப்பிய சமாதானச் செய்தியை ஒப்புக் கொண்டு, உச்சயினிக்குள் கம்பீரமாக நுழைந்தான் பராக்கிரமன்.

பராக்கிரமனின் படைமுகாமில் இருந்த வீரர்கள் தங்கள் ஆயுதங்களை எல்லாம் கீழே போட்டு விட்டு, அலட்சியமாக இருந்தனர். மேலும், போர்முனையில் எச்சரிக்கையோடு இல்லாமல், இருந்தனர்.

உச்சயினி நகரத்துக்குள் சிக்கிக் கொண்ட பகை அரசன் பராக்கிரமன் சிறை பிடிக்கப்பட்டான். இதைப் பெரிய வாய்ப்பாகக் கொண்டு உச்சயினியின் படைகள் வீறு கொண்டு எழுந்து பகைவர்களின் பாசறைக்குள் புகுந்து, பெருத்த சேதத்தை உண்டாக்கின.

அதன்பின், மறைந்திருந்த அரசனையும் ராணியையும் வெளியே அழைத்து வந்து, ஆட்சிபீடத்தில் அமர்த்தினார்கள் அமைச்சர்கள்.

அமைச்சர்களின் சாமர்த்தியத்தால், தன் நாடு, பகைவனிடம் சிக்காததோடு அவனையும் சிறைப்பிடித்ததற்கு அமைச்சரவைக்கு நன்றி தெரிவித்து, பல வெகுமதிகளை அளித்தான் உச்சயினி அரசன்.

திறமையான அமைச்சர்களால் நாடும் அரசனும் மாற்றானிடம் அகப்படாமல் தப்பிக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.
>
> – *தந்தை செல்வா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கைத் தமிழரசுக் கட்சியை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாகக் கூறுகிறது.

அதேநேரம் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை, கிளிநொச்சி, வட்டுக்கோட்டை கிளைகள் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிப்பதாகத் தீர்மானம் எடுத்துள்ளன.

இதேநேரம் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க, அரியநேத்திரன் ஆகிய மூவருக்கும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான குலநாயகம், சீ.வி.கே.சிவஞானம் ஆகியோர் தமிழரசுக் கட்சி சார்பில் நேற்றைய தினம் (16) வவுனியாவில் வைத்து விடுத்த அறிக்கையில், தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளியிடப்பட்ட அறிக்கையை ஏற்க முடியாதென தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கூறியுள்ளார்.

இந்த நினைவுகளோடு உறங்கியபோது, வெள்ளை வேட்டி, நஷனல், உத்தரிய மடிப்புடன் கூடிய சால்வையோடு ஒருவர் வானவெளியில் இருந்து எம்மை நோக்கி வருகிறார். யாராக இருக்கும். ஒருகணம் சிந்திப்பதற்குள் அந்தப் பெரியவர் எம் முன் வந்தார்.

ஓ! அவர் தந்தை செல்வநாயகம். ஐயனே! உங்கள் வரவு நல்வரவாகட்டும் என்றேன்.

எப்படியாயிற்று எங்கள் தமிழினத்தின் நிலைமை. குரல் விக்கித்துக் கொண்டது. அவரின் கண்கள் கலங்கின.

எப்படியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியை எங்கள் மக்கள் வளர்த்தெடுத்தார்கள்.

தமிழரசுக் கட்சிக்காகத் தங்கள் சொத்துக்களை ஈகை செய்தவர்கள். தங்கள் வாழ்நாள் முழுவதையும் கட்சிக்காக அர்ப்பணித்தவர்கள். சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியவர்கள். அதற்காக சிங்களப் பொலிஸாரிடம் அடிவாங்கியவர்கள்.

தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டங்களை ஏற்பாடு செய்தவர்கள். அந்தக் கூட்டங்ளில் திரண்ட மக்கள். கட்சிக்காக உயிரைக் கொடுத்தவர்கள் இப்படி எத்தனை எத்தனை தியாகங்களால் கட்டி வளர்க்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி; இன்று உடைபட்டு, சிதைபட்டு, சின்னாபின்னப்பட்டு கிடப்பதைப் பார்க்கும் போது இதயம் வெடிக்கிறது.

என்ன செய்வதென்று தெரியாமல் சிந்தை கலங்குகிறது.

இவ்வாறு கூறிய தந்தை செல்வா தன் தோளில் கிடந்த உத்தரியத்தால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

தந்தையே! நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். தமிழ் மக்கள் தங்கள் பாட்டை தாங்களே பார்த்துக் கொள்வார்கள். இனி நமக்கு போக்கிலித்தனமான அரசியல் வேண்டவே வேண்டாம்.

சுயநலமும் உள்ளொன்றும் புறமொன்றும் கொண்ட தமிழ் அரசியல்வாதிகளால் அழிந்தவர்கள் நம் தமிழ் மக்கள்.

ஆகையால் நீங்கள் அமைதி கொள்ளுங்கள் என்று கூறி அவரைத் தேற்ற, ஏதோ தமிழரசுக் கட்சியைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று மெல்லக் கூறிய தந்தை செல்வா, வானத்தை நோக்கி ஒளியாய் மேலெழுந்தார்.

அந்த ஒளியால் விழித்த யாம், கண்டது கனவு என்றுணர்ந்தோம்.

## பொது வேட்பாளர் என்கின்ற மாயமானுக்கு மயங்க வேண்டாம்

### சுமந்திரன் எம்.பி

*(மானிப்பாய்)*

தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு மாயமானுக்கு மயங்க வேண்டாம் என இலங்கைத்தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸவை ஆதரித்து யாழ்ப்பாணம், மானிப்பாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகச் சொற்ப அளவிலான எண்ணிக்கையானவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு மாயமானுக்கு மயங்கி அதனை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றார்கள்.

எனினும், அவ்வாறான எந்த முயற்சியிலும் தமிழரசுக் கட்சி ஈடுபடாது என்பதுடன், அதில் எங்களின் எந்தப் பங்களிப்பும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித்தை ஆதரிக்க வேண்டும் என முடிவுசெய்துள்ளது. தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற அபாயத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் எனச் சொன்னோம்.

எனினும், தமிழரசுக் கட்சியை எப்படியும் நாங்கள் வழிக்குக் கொண்டு வருவோம் எனச் சொல்லிக் கொண்டிருந்தவர்களுக்கு அது முடியாமல் போனது.

அதனால், எங்களுடைய கட்சியில் இருந்தே ஒருவரைப் பிரித்தெடுத்து அவரைத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்னும் நாமம் சூட்டி தேர்தலில் களமிறக்கியுள்ளனர்.

அவருக்கு எதிராக நாங்கள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அவரிடத்தில் விளக்கம் கோரிக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

எங்கள் கூட்டங்களுக்கு அவர் வருவதற்கு நாங்கள் தடை விதித்திருக்கின்றோம்.

அவருடன் இணைந்து பிரசாரத்தில் ஈடுபடும் எங்கள் உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மயிலத்தமடு மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

### ஜனாதிபதி வேட்பாளர் சஜித்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரத்திற்கு தமது அரசாங்கத்தினால் தீர்வு காணப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெற்றதையடுத்து நல்லாட்சி அரசாங்கத்தினால் கைவிடப்பட்ட உதா கம்மான வீடமைப்பு வேலைத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

அதேபோல, பாரம்பரியமாக விவசாயம் செய்து வந்த பகுதிகள் தற்போது பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டுள்ளது.

அவ்வாறு பாதுகாப்பு வலயமாகக் காணப்படும் விவசாயிகளின் காணிகள் மீண்டும் விவசாயத்துக்காக வழங்கப்படும்.

அத்துடன், யானை மனித மோதலை குறைத்துக் கொள்வதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

10 இலட்சம் புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்படுவார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திக்கு ஐக்கிய மக்கள் கூட்டணி தயாராகவுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## மணமகனுக்காக காத்திருந்த மணமகள் விபத்தில் மரணம்

மஹியங்கனை - பதுளை பிரதான வீதியில் மஹியங்கனை ரஜமகா விகாரைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியின் பின்புறம் வேகமாக வந்த கார் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ரிதிமாலியத்த 12, ஊரணிய பிரதேசத்தைச் சேர்ந்த ஹிமான்ஷி செவ்வந்தி (24) என்ற திருமணமாகாத யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யுவதியைப் பார்ப்பதற்காக மணமகன் [illegible] வரவிருந்த நிலையில், தேவையான பொருட்களைக்கொண்டு வருவதற்காக அவரது தந்தை, தாய் மற்றும் சகோதரியுடன் மஹியங்கனை நகருக்கு சென்ற போதே விபத்து இடம்பெற்றுள்ளது.

மேலும், விபத்தில் காயமடைந்த ஏனைய மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும், 15 வயது சிறுமி பதுளை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தை ஏற்படுத்திய காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கடுவெல வெலிவிட்ட பகுதியைச் சேர்ந்த 21 வய[illegible]. தெரி[illegible]றது. (ம-7)

## விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்

### நெடுந்தீவில் சம்பவம்

*(நெடுந்தீவு)*

நெடுந்தீவில் விபரீத முடிவெடுத்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பரராஜசிங்கம் காந்தரூபன் வயது 33 என்ற இளைஞரே உயிரிழந்தவர் ஆவார்.

சடலம் உடற்கூற்றுச் சோதனைக்காக நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை நெடுந்தீவு பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## 24 மணித்தியாலத்தில் 184 தேர்தல் முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கடந்த 24 மணித்தியாலங்களில் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு 184 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தேசியதேர்தல்முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 23 முறைப்பாடுகளும், மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 161 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதன்படி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 4,215 ஆக அதிகரித்துள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4,097 முறைப்பாடுகளும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 30 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

14

### மொழிகள்

ஆங்கிலம், பிரெஞ்சு இரண்டும் ஆட்சி மொழிகளாகும். பிரெஞ்சு மக்களின் மொழிப் போரின் பின்னரே ஜூலை 7, 1969 அலுவல் மொழிச் சட்டம் ஊடாகக் கனடா முழுவதும் ஆட்சி மொழியானது. இதன் பின்னரே கனடா இரு மொழி நாடாக அறியப்படலாயிற்று.

நூனாவுட் ஆட்சி நிலப்பகுதியில் இனுக்டிடூட் மொழி ஆட்சி மொழியாகும். இனுக்டிடூட் இனுவிற் முதற் குடிமக்களின் மொழியாகும். அம்மொழியை பேசும் மக்கள் 20 000 வரையில் இருந்தாலும், அவர்களுக்கும் அந்த மொழிக்கும் தரப்படும் மதிப்பும் அக்கறையும் குறிப்பிடத் தக்கதாகும்.

ஆங்கிலத்தை 59.7% மக்களும், பிரெஞ்சை 23.2% மக்களும் தங்கள் தாய்மொழியாகக் கொண்டுள்ளார்கள். கனடா ஒரு பல்பண்பாடு நாடாக இருந்தாலும் நாட்டின் ஒவ்வொரு குடிமையும் ஒரு ஆட்சி மொழியையாவது அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க் கப்படுகின்றது. அதனால் 98.5% மக்களுக்கு ஏதாவது ஒரு ஆட்சி மொழியிலாவது பேச முடியும்.

ஆட்சி மொழி அல்லாத மொழிகளுக்கும் தகுந்த முக்கியத்துவம், மதிப்பு, சுதந்திரம் வழங்கப்படுகின்றது. ஆட்சி மொழியற்ற ஒரு மொழியை 5,202,245 மக்கள் தங்கள் தாய் மொழியாகக் கொண்டுள்ளார்கள்.

எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட மக்கள் செறிந்து வாழும் ஒரு இடத்தில் அந்த மொழியில் சமூக சேவைகள் பெற, அந்த மொழியைக் கற்க, பாதுகாக்க உதவ அரசு முற்படுகின்றது. சீன, இத்தாலியன், ஜேர்மன், பஞ்சாபி மொழிகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்க மக்களால் பயன் படுத்தப்படுகின்றது.

### கனடாவின் குடியேற்ற வரலாறு.... பழங்குடிகள்

கனேடிய பழங்குடிமக்கள் அரசியல் நோக்கில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் பின்வரும் மூன்று வகைகளாக இனங்காணப்படுகின்றனர்: "இன் டியன்ஸ்", இனுவிட், மெயிற்ரீஸ். மூன்று பெரும்வகைகளாக அரசியல் சட்ட அடையாளங் களை கொண்டிருந்தாலும் இனம், மொழி, பண்பாடு, வாழ்வியல், புவியியல் நோக்கில் பலவகைப்படுவார்கள். "இண்டியன்ஸ்" என்ற சொல் இழிவானதாக கனேடிய பழங்குடிகள் கருதியதால், அவர்கள் தங்களை முதற் குடிகள் (First Nations) என்று அழைத்தார்கள். இவர்கள் கனடிய செவ்விந்தியர்கள் என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. பழங்குடிகள் கனடாவின் மிக குளிரான மேற்பகுதிகளில் வாழ்ந்தவர்களே இனுவிட் ஆவார்கள். இவர்களை அழைக்க எஸ்கிமோ என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

### ஐரோப்பியர் வரவு

பிரெஞ்சு மக்கள் 1605 ஆம் ஆண்டளவில் ரோயல் துறைமுகம் என்ற பகுதியிலும் அத னைத் தொடர்ந்து 1608 ஆம் ஆண்டு கியூ பெக்கிலும் முதன்முதலில் குடியமர்ந்தனர். ஆங்கில குடியேற்றங்கள் நியூ பவுண்ட்லாந்தில் 1610 ஆம் ஆண்டு குடியமர்ந்தனர். ஐரோப்பியரின் வருகை புது நோய்களை வட அமெரிக்காவுக்கு கொண்டுவந்தது. அப்புதிய நோய்களுக்கு உடலில் எதிர்ப்புத்திறனற்ற முதற்குடிமக்கள் பெரும்பான் மையானோர் அந்த நோய்களுக்கு இரையானார் கள்.

### பல்நாட்டவர் வருகை

பிரெஞ்சு, ஆங்கிலேயக் குடிவரவாளர்களாலும் முதற்குடிமக்களாலும் கனடா உருவாக்கப்பட்டது. கூட்டமைப்பின்போது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங் களின்படி கனடாவை இணைக்கும் ஒரு தொடருந் துப் பாதை கட்டவேண்டிய தேவை இருந்தது. இதற்காக 1870களில் சீனர்கள் தொடருந்து பாதை கட்டமைப்பில் வேலை செய்வதற்காக வரவழைக் கப்பட்டனர். 1885ஆம் ஆண்டு தொடருந்துப் பாதை கட்டிமுடிந்த பின்பு சீனர்கள் வரவு கட்டுப்படுத்தப்பட்டது. குறிப்பாக "Chinese Exclusion Act" 1923ஆம் ஆண்டு நடை முறைப்படுத்தப்பட்டது.கறுப்பின மக்கள் வெவ்வேறு காலப்பகுதியில் கனடாவில் குடியேறினார்கள். தொடக்கத்திலேயே அவர்கள் அடிமைகளாக பிரெஞ்சு மக்களுடன் கனடாவுக்கு வந்தனர். எனினும் 1793 ஆம் ஆண்டில் மேல் கனடாவில் அடிமைகளுக்கு விடுதலை கிடைத்தது. அதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் இருந்து பல கறுப்பின மக்கள் கனடாவுக்கு விடுதலை தேடி வந்தனர். இவர்கள் வந்த பாதை நிலத்தடி இருப்புப்பாதை (Underground railroad) என அழைக்கப்பட்டது.

1920 ஆண்டளவில் கனடா இன அடிப்படை யிலான குடிவரவுக் கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கியது. இதன் காரணமாக ஐரோப்பியர் தவிர்ந்த ஏனைய இன மக்கள் கனடாவுக்குள் வருவது கடினமாக்கப்பட்டது. இக்கொள்கை 1967 ஆம் ஆண்டு நீக்கப்பட்டது. எனினும், இதற்க மையவே இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் பல்வேறு ஐரோப்பிய குடிவரவாளர்களை உள் வாங்கியது. வியட்நாம் போரின்போது அமெ ரிக்காவில் கட்டாய இராணுவ சேவையைத் தவிர்த்தவர்கள் (draft dodgers) பலரையும் உள்வாங்கியது.

உலகில் கனடா முதன்முதலாக பல்லினப் பண்பாடு கொள்கையை அதிகாரப்பூர்வ கொள்கை யாக 1971 ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து பன்னாட்டு மக்களும் கனடாவுக்கு குடிவருவது அதிகரித்தது. 1980 களிலும் 1990களிலும் தமிழர்கள், பிற தெற்காசிய மக்கள், ஆபிரிக்கர்கள் புதிய குடிவரவாளர்களில் கணிசமான தொகையினராக இருந்தார்கள்.

### கனேடிய கூட்டரசு உருவாக்கம்

பிரிட்டனின் குடியிருப்புகளாக இருந்த ஒன்ரா றியோ, கியூபெக், நியூ பிரன்ஸ்விக், நோவோ ஸ்கோஷியா பிரிட்டிஷ் வட அமெரிக்கா சட்டத்தின் மூலம் கனேடிய கூட்டரசாக உருவானது. கனடா வின் பிற மாகாணங்கள் பின்னர் கூட்டரசில் சேர்ந் தன. நியூபவுன்லாந்து மற்றும் லாப்ரடோர் 1949ஆம் ஆண்டு கனடாவுடன் கடைசியாக இணைந்த மாகாணம் ஆகும்.

### 1867 ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் வட அமெரிக்கா சட்டத்தின் முக்கிய விடயங்கள்

பிரிட்டிஷ் வட அமெரிக்கா சட்டம், 1867 ஆம் ஆண்டின் வட அமெரிக்காவில் உள்ள மூன்று பிரிட்டிஷ் காலனிகளான நோவா ஸ்கோடியா, நியூ பிரன்ஸ்விக் மற்றும் கனடா ஆகியவை "கனடா என்ற பெயரில் ஒரு டொமினியன்" ஆக இணைக் கப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன் றத்தின் சட்டமாகும்.

டொமினியன் என்பது பிரிட்டிஷ் சாம்ராஜ் யத்தின் ஒரு பகுதியாக இருக்கும் ஆனால் அதன் சொந்த அரசாங்கத்தைக் கொண்டிருக்கும் நாடு எனப் பொருள்படும். 1867 ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் வட அமெரிக்கா சட்டம் கனடாவின் முதல் அரசியலமைப்பாகும். அது மார்ச் 29, 1867 இல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. ஜூலை 1, 1867 முதல் நடைமுறைக்கு வந்தது.

இச் சட்டம் பிரிட்டிஷ் வட அமெரிக்காவின் பிற காலனிகள் மற்றும் பிரதேசங்கள் இதனுடன் சேர அனுமதிக்கப்படலாம் என்று கூறுகிறது.

இந்த சட்டங்களை யார் உருவாக்கியது மற்றும் நாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் இந்த முடிவுகள் எவ்வாறு எடுக்கப்பட்டன என்பவற்றை உள்ளடக்கியது. இவ் அனைத்து சட்டங்கள் மற்றும் அதிகாரம் பிரிட்டிஷ் முடியாட் சியின் ஒப்புதலுக்கு உட்பட்டு உருவாக்கப்பட்டது.

பிரித்தானிய பாராளுமன்றத்தின் மாதிரியாக, கனேடிய அரசாங்கம் உள்ளது. பிரிட்டிஷ் வட அமெரிக்கா சட்டத்தில் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு நியமிக்கப்பட்ட மேல் சபை (செனட்) மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சபை (பொதுச் சபை), கூட்டாட்சி மற்றும் மாகாண அரசாங் கங்களின் அதிகாரம் மற்றும் பொறுப்புகள் என்பனவும் இச் சட்டத்தில் வரையறுக்கப்பட் டுள்ளது.

இந்த சட்டம் 1982 வரை கனடாவின் "அரசி யலமைப்பாக" செயற்பட்டது. அது அரசியலமைப்பு சட்டம் 1867 என மறுபெயரிடப்பட்டது. மேலும் 1982 இன் கனடாவின் அரசியலமைப்பு சட்டத் தின் அடிப்படையாக மாறியது. 1982 இன் கன டாவின் அரசியலமைப்பு மூலம் பிரிட்டிஷ் பாரா ளுமன்றத்தின் அதிகாரம் சுதந்திர கனேடிய பாராளுமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

### கனடாவின் அரசியலமைப்பு

கனடாவின் அரசியல் அமைப்பு (Consti tution of Canada) கனடாவின் மீயுயர் சட்டமாகும். நாட்டின் வரையறுக்கப்பட்ட ஆளும் மன்றத்தின் இயற்றுச் சட்டங்களையும் வரை யறுக்கபடாத வழமைகளையும் அரசியல் வழக் கங்களையும் ஒன்றிணைத்த அரசியலமைப்புச் சட்டம் ஆகும்.

மக்னா கார்ட்டாவை அடித்தளமாகக் கொண்ட இதுவே உலகின் மிகவும் பழைமையான, செயற்பாட்டில் உள்ள அரசியலமைப்புச் சட்ட மாகும். இந்தச் சட்டம் கனேடிய அரசு, கனடாக் குடி மக்களின் குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் மற்றும் கனடாவில் வாழ்வோரின் உரிமைகளை வரையறுக்கின்றது. கனடாவின் அரசியலமைப்புச் சட்டம் அரசியலமைப்பை விளக்குவதுடன் அதன் செயற்பாட்டை விவரிக்கின்றது.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## காலையில்...

பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி விசேட அறிக்கையொன்றை இலங்கைத் தமிழரசுக் கட்சி நேற்றுத் திங்கட்கிழமை வெளியிட்டுள்ளது.

வவுனியாவில் அறிக்கை வெளியிடப்பட்டபோது கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா பிரசன்னமாகியிருந்தார்.

முன்னதாக காலை பொதுவேட்பாளர் அரியநேத்திரனைச் சந்தித்து மாவை சேனாதிராசா தனது ஆதரவைத் தெரிவித்திருந்தார்.

எனினும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவும் சி.சிறீதரனும் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என வலியுறுத்தியிருந்தனர்.

அதேவேளை சி.சிறீதரன் சஜித் எதிர்ப்புத் தீர்மானத்தை முன்வைத்ததுடன் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக தான் பிரசாரம் செய்யவுள்ளதாக வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து ஆராயப்பட்டது. தமது அபிலாசைகளுக்கு மிகவும் அண்மித்ததாக சஜித் பிரேமதாஸவின் கொள்கைப் பிரகடனமே காணப்படுவதாகச் சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன் என சி.சிறீதரன் தெரிவித்தபோதும் நேற்றைய கூட்டத்தில் ஐந்து பேர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலைப்பாட்டில் இருந்தார்கள்.

அதன் தொடர்ச்சியாகவே ஏற்கெனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக இறுதி முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கிளிநொச்சியில்...

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சியில் இடம்பெற்ற பிரசார கூட்டத்திற்கு அதிகளவிலான மக்கள் வருகை தந்தனர்.

குறித்த பரப்புரைக் கூட்டமானது நேற்று இடம்பெற்றது.

2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமிழ்க் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் இணைந்து பா.அரியநேத்திரனை தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறக்கினர்.

செப்ரெம்பர் 21ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் உட்பட பல்வேறு தரப்பினராலும் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, சில தமிழ்க் கட்சிகள், அமைப்புக்கள் மற்றும் தமிழ்த் தலைவர்கள் பொது வேட்பாளர் தெரிவுக்கு ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்றைய தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வருகை தந்தனர். (ம-7)

## சஜித்துக்கு...

கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்பின்னர் ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் குழு கடந்த வாரம் கூடியிருந்தது.

இதன்போது சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாங்கள் இணங்கக்கூடிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டிருந்தது.

அதன்படி சஜித் பிரேமதாஸவை, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரிப்பதற்கான காரணங்களை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை வவுனியாவிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று வெளியிடப்பட்டது.

புதிய அரசியலமைப்பை உருவாக்குதல், ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ள 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுலாக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாகத் தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பின் மூலம் தீர்வு காணப்படுதல் வேண்டும் என்பது பிரதானமாகும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்ததன் அடிப்படையில், சஜித் பிரேமதாஸவின் விஞ்ஞாபனத்தில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை காண்பதற்காகக் கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (ம-7,250)

## தமிழ் மக்களின்...

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்ப் பொது வேட்பாளரினை நிறுத்தியதன் பின் தென்னிலங்கை வேட்பாளர்கள் தங்களதுமனைவிகளோடு வடக்குக் கிழக்குக்கு வந்து தமக்கு வாக்களிக்குமாறு கோருகிறார்கள். இவர்களுக்குச் சில வெட்கம் கெட்ட தமிழர்களும் முன்னின்று செயற்படுகிறார்கள். எந்தத் தீர்வையும் முன்வைக்காத அவர்களுக்கு எவ்வாறு வாக்களிப்பது.

பொது வேட்பாளரை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது தமிழரசுக் கட்சியின் ஒருமித்த தீர்மானமல்ல. அது ஒரு குழுவின் தனிப்பட்ட தீர்மானம். இன்று தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள 7 கட்சிகள் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து நிற்கின்றன.

எந்தவொரு பிரதான வேட்பாளரும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை முன்வைக்கவில்லை. சமஷ்டி இல்லாவிடினும் குறைந்த பட்சம் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வைக்கூட எந்தவொரு வேட்பாளரும் குறிப்பிடவில்லை. இவர்களுக்கு எவ்வாறு நாம் ஆதரவளிப்பது.

தமிழ்ப் பொது வேட்பாளரினை நிறுத்தியதனூடாக உலகமெங்கிலும் இருக்கும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் யாவும் ஒரே குடையின் கீழ் ஒன்று பட்டுள்ளார்கள். அவர்கள் அனைவரும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

நீங்கள் எனக்களிக்கும் வாக்குகள் எனக்கானவை அல்ல. உங்களுக்கானவை. தமிழ்த் தேசியத்துக்கானவை என்றார். (ம-7,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2024.09.16 — சீட்டிழுப்பு இலக்கம் 5598 — K 7 5 2 1 9 0 — அத சம்பத K 2 1 9 0 — சீட்டிழுப்பு இலக்கம் 173

தன நிதானய — திகதி - 2024.09.16 — சீட்டிழுப்பு இலக்கம் - 1628 — I 21 44 51 62 I — Double Chance 01293

மெகா பவர் — திகதி 16/09/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1946 — K 17 10 22 35 65 — Double Chance 16343

லக்கி 7 VIP — திகதி 2024.09.16 — சீட்டிழுப்பு இலக்கம் 424 — W 4 1 1 2 3 4 W

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3840 — சீட்டிழுப்பு திகதி 16.09.2024 — H 12 57 75 79 — H 19212

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.09.16 — சீட்டிழுப்பு இலக்கம் 907 — மேஷம் 03 10 18 45 மேஷம் — 29998 — 23

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பன சம்பத — 16.09.2024 — வெற்றி வாரம் 306 — வர்ணம் ஊதா — H 4 6 8 0 2 2 — 29266 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,159,344.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2572 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 16.09.2024 — தினம் திங்கள் — 17 41 65 72 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,112,106.40

சனிதா — திகதி 2024.09.16 — வெற்றி வாரம் 4733 — 23 32 46 57 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,200,394.80 — 72224

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4284 — வர்ணம் மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2024.09.16 — தினம் திங்கட்கிழமை — 15 17 37 58 — கடகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,830,766.00 — 213095

சுப்பர் இலக்கம் — H 11 11 16 27 63 — 1748 — பச்சை — 16.09.2024 திங்கள் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 545,340,897.80

ஜயோதா Jayoda — திகதி 2024.09.16 — வெற்றி வாரம் 2060 — வர்ணம் செம்மஞ்சள் — 29 30 37 60 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,367,644.00

அத கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2398 — சீட்டிழுப்பு திகதி 2024.09.16 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,469,508.00 — 17 53 67 75 I — 843477

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக்...

சிறீதரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு என நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய(நேற்று) கூட்டத்தில் ஐந்து பேர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலைப்பாட்டில் இருந்தார்கள்.

இது தொடர்பாக ஒரு அறிக்கையும் எழுதப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாகவே இருந்தது.

மத்திய குழுவில் கடந்த முதலாம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானம் பிழை என நான் எழுத்து மூலமாகவும் வழங்கி இருக்கிறேன்.

நான் ஒரு தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்ற ரீதியில் எழுத்து மூலமாக அறிவித்து விட்டுத்தான் பிரித்தானியா சென்றிருந்தேன்.

6 ஆம் திகதி நான் மீளவும் இலங்கைக்கு திரும்புவேன். ஏழாம் திகதி வரை கூட்டத்தினை வைக்க வேண்டாம் எனக் கூறியிருந்தேன்.

அவ்வாறு கூட்டங்கள் வைத்தாலும் தீர்மானங்கள் எடுக்கப்படாது என்று பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் எனக்கு உறுதிமொழியையும் தந்திருந்தார்.

தற்போதைய தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராஜாவை 26 ஆம் திகதி சந்தித்து பேசுகின்ற போது நாங்கள் தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றமாட்டோம் சில விடயங்கள் தொடர்பாக பேச இருக்கிறோம் என தெரிவித்திருந்தார்.

இவற்றையெல்லாம் தாண்டி ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி ஆறு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழு கூடி தீர்மானம் எடுக்காத நிலையில் மத்திய குழுவில் அவசர அவசரமாக யாருடைய தேவைக்காக யாருடைய தீர்மானத்தை எடுத்தார்கள். சஜித் பிரேமதாஸவுக்காக அந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

அந்த தீர்மானம் எடுத்த பின்னர் நான் கடிதம் மூலமாகவும் தெரிவித்திருந்தேன், இது பூரணமற்ற ஒரு முடிவு இதனை நான் எதிர்க்கிறேன், என்னைப் பொறுத்தவரை நான் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக இந்த மக்களின் திரட்சிக்காக தமிழர்களுடைய தேசிய திரட்சியை கொண்டு வருவதற்கும் தமிழ் மக்களுடைய தேசிய உணர்வுகளை பிரதிபலிக்க கூடிய வகையிலும் நாங்கள் ஒரு பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்.

பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்கின்ற ஒரு தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருந்தேன். அதனை இப்போதும் கொண்டிருக்கிறேன். இன்றும் இந்தக் கூட்டத்தில் அதனை வலியுறுத்தி என்னுடைய கருத்து இவர்களுடைய தீர்மானத்திற்கு எதிரானது என்பதனை பதிவு செய்யுமாறு தெரிவித்திருக்கிறேன்.

சிறீதரன் இதனை ஏற்கவில்லை அதாவது சிறீதரன் சஜித் பிரேமதாஸவுக்கு மட்டுமல்ல ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திசாநாயக்க உட்பட்ட தென்னிலங்கையினுடைய வேட்பாளர்கள் யாருக்கும் ஆதரவு இல்லை என்பதை பதிவு செய்யுமாறு குறிப்பிட்டு அந்த கூட்டத்திலிருந்து என்னுடைய நேரம் முடிந்ததும் புறப்பட்டேன் என தெரிவித்தார். (ம-7)

## குழப்பம்...

பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்த பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்பு படையினருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்களிப்பு தினத்தன்றும் அதன் பின்னரும் நாட்டின் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினருக்கு மேலதிகமாக முப்படையினரும் களமிறக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, வாக்குப்பெட்டிகளை கொண்டு செல்லும் போது விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ம-7)

# நாட்டில் மீண்டும் வரிசை யுகத்துக்கு இடமளிக்காதீர்

## ஜனாதிபதி ரணில்

வளமான மற்றும் நிலையான பொருளாதாரம் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமா? அல்லது நாட்டை மீண்டும் வரிசை யுகத்திற்கு தள்ளுவதா? என்பதை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

பதுளையில் நேற்று (16) பிற்பகல் இடம்பெற்ற 'ரணிலால் இயலும்' பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை இருளில் மூழ்கடிக்கும் வரிசை யுகத்திற்கு இடமளிக்க வேண்டாம்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக கடந்த இரண்டு வருடங்களில் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டத்தை வலுவாக நடைமுறைப்படுத்த மக்களிடம் ஆணை கேட்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

# 60 ஆயிரம் பொலிஸார் தேர்தல் கடமையில்

(கொழும்பு)

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு 60 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பொது மக்கள் பாதுகாப்புக்காகவும் விசேட நடவடிக்கைகளுக்காகவும் 54 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகளை கடமையில் ஈடுபடுத்த முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது அதன் எண்ணிக்கை 60 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இந்நிலையில், தேர்தல் நடவடிக்கைகளுக்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ள பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)


**வேலை ஆட்கள் தேவை**

பொருட்களை விநியோகிக்கும் வாகனத்திற்கு வேலையாட்கள் (காசாளர் / உதவியாளர்கள்) தேவை.

குறிப்பு: திருநெல்வேலியை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

(1959)

தொடர்புகளுக்கு: 077 009 0189

**விற்பனைக்கு**

- யாழ். அல்லைப்பிட்டியில் தென்னந் தோப்புடன் சகல வசதியுடன் கூடிய மாடி வீட்டுடன் அமைந்த கடற்கரையோரமாக 10 ஏக்கர் காணியும்.
- யாழ். நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்

உடன் விற்பனைக்குண்டு. (1962)

077 723 2535

**மணமகன் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த இந்து, 1989 இல் பிறந்த சித்திரை நட்சத்திரம் 4ம் பாதம் மணமகளுக்கு மணமகன் தேவை. (348)

தொடர்புகளுக்கு: Whatsapp & Mobile Number

076 044 7942

**விசாக்கான (Show money)**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%

- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு: (1908)

075 033 6759

**இந்தியன் விசா சேவைகள்**

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (350)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

**பதவி வெற்றிடம்**

- **அலுவலகச் செய்தியாளர்கள்** (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்கள்** (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்** [பகல் கடமை] (சாதாரண தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது **076 097 3121** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர், வலம்புரி நாளிதழ்.

**இரண்டாம் மொழி சிங்கள வகுப்புக்கள்**

2025. தரம் 6 மாணவர்களுக்கான இரண்டாம் மொழி சிங்களம் அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்.

ஆரம்பம் :- 23.09.2024
நேரம் :- மாலை 3.00 மணி
இடம் :- இலங்கை வேந்தன் திருமண மண்டபம் அருகில்.நீராவியடி, யாழ்ப்பாணம். (1960)

தரம் 6,7,8,9,10,11 வகுப்புக்கள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு: 077 214 0220, 077 990 6867

**V2 VISA SERVICES கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas, Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1201)

**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.

(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College, 49A, Chapel Street, Jaffna.

(C-1201)

College Of International Migration Skills

0777 068 777 / 077 7719 322


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.